விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 10 சனிக்கிழமை (23.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## ஞாயிறு, திங்கள் நாடு முழுவதும் ஊரடங்கு

(கொழும்பு)
நாளை ஞாயிற்றுக்கிழமை மற்றும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நாடு முழுவதும் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங் 15

பொதுத் தேர்தலை நடத்தமுடியும்


## ஜனாதிபதியின் ஆலோசகர் டி சில்வா உயர் நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)
நாட்டில் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பொதுத் தேர்தலை நடத்த முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தனக்கு அறிவித்ததாக ஜனாதிபதி ஆலோசகர் ரொமேஷ் டி சில்வா உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் நடாத்துவதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான 15

எதிர்காலத்தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறவுள்ள

# இனப்படுகொலையின் அறிகுறியே கோட்டாவின் போர் வெற்றி அறிவிப்பு



## ஊடக அறிக்கையில் நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்புசார் இனப்படுகொலை ஒன்று தமிழர்களுக்கு எதிராக இடம்பெறவுள்ளதற்கான முன் அறிகுறியே கோட்டாவின் போர் வெற்றி நாள் அறிவிப்பு என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

## பல கோடி ரூபாய் பெறுமதியான போதை பொருள் இந்தியாவில் பறிமுதல்

(கொழும்பு)
இந்தியாவின் கடல் வழியாக நாட்டுப்படகில் இலங்கைக்கு கடத்த முயன்ற இந்திய மதிப்பிலான பல கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருள் பறி முதல் செய்யப்பட்டதுடன், போதை பொருள் கடத்தல்காரர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின் இராமநாதபுரம் அருகே திருவாடானை பகுதியில் உள்ள பாக்ஜல சந்தி கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு நாட்டுப் படகில் 15

## கிளி.முகமாலைப் பகுதியில் மனித எச்சங்கள் அடையாளம்

விடுதலைப்புலிகளின் சீருடைகள் துப்பாக்கிகள் மீட்பு



(கிளிநொச்சி)
கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் பெருமளவு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் அந்த இடத்தில் விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற் 15

யாழில் வாள்வெட்டு

## இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பண்டியன் தாழ்வுப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலை 15

கொரோனா அச்சம் நீங்கியதாக

## சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்திய பின்பே பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்



### கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)
நாட்டில் கொரோனா அச்சம் முழுமையாக குறைவடைந்ததை சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்திய பின்னரே பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் 15

## கொரோனா வைரஸ் 1068 ஆக உயர்வு

நேற்றும் 20 பேருக்கு தொற்று

(கொழும்பு)
கோரோனாவைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 20 பேர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது. 15

லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின்

## பெற்றோல் விலை 5 ரூபாயால் குறைப்பு

(கொழும்பு)
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் ஒக்டெய்ன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 5 ரூபாயால் குறைப்பதாக அறிவித்துள்ளது.

அதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 137 ரூபாயென லங்கா ஐ.ஓ.சி. அறிவித் 15

## பாகிஸ்தானில் விமான விபத்து: 98 பேர் பலி



(கராச்சி)
பாகிஸ்தான் நாட்டில் நேற்று நடந்த விமான விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 98 பேர் உயிரிழந்துவிட்டதாக கராச்சி மேயர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் லாகூரில் இருந்து கராச்சி நோக்கி நேற்று பயணிகள் விமானம் ஒன்று புறப்பட் 15

## பிறந்த நாள் கொண்டாடியவர்கள்

# தனிமைப்படுத்தப்பட்டனர்

(திருகோணமலை)

திருகோணமலை - அலஸ்தோட்டம் பகுதியில் பிரபல விடுதியொன்றில் பிறந்த நாள் கொண்டாடியவர்கள் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக உப்பு வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவல கம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் களைக் கட்டுப்படுத்தல் சட்டத்தை மீறி பிரபல விடுதி ஒன்றில் பிறந்த நாள் கொண்டாடிய குற்றச்சாட்டின் பேரில் பிரபல விடுதி மண்டப உரிமையாளர் மற்றும் பிறந்த நாள் கொண் டாடியவர்களை நேற்று தனிமைப்படுத்தி உள்ளதாகவும் அவ்வலுவலகம் தெரிவித் துள்ளது.

கடந்த 15ஆம் திகதி உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் பொது சுகாதார பரிசோதகரின் அனுமதி பெறாமல் ஒன்றுகூடி பிறந்த நாளை கொண்டாடிய நபர்கள் குறித்த விபரங்களை திரட்டி வருவதாகவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பேச்சாளரொருவர் தெரி வித்தார். (ம-3)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## முப்படையினருக்கும் அதிகாரம்

### வர்த்தமானி நீடிக்கப்பட்டது

பொதுமக்கள் மத்தியில் அமைதியை தொடர்ந்து பேணுவதற்காக ஆயுதம் தரித்த படையினர் நாட்டின் அனைத்து மாவட்டங் களிலும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடு படுத்துவது தொடர்பான உத்தரவை தொடர் ந்து நீடிக்கும் அதி விசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதிகோட்டா பய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் நேற்று முதல் அமு லுக்கு வரும் வகை யில் இந்த அதி விசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்கு தலின் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம நீக்கப்பட்ட தையடுத்து, பொதுமக்கள்பாதுகாப்பு கட்டளைச சட்டத்தின் கீழ், ஜனாதிபதியால் பாதுகாப்பு நடவடிக்கைகளில் முப்படையின ரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-3)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரும்
கீரிமலை மத்திய சித்த மருந்தக
மருத்துவருமாகிய திருமதி **வ.பாமினி**
அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **தம்பாப்பிள்ளை கனக சிவநாயகம்**

அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை**

(2880)



## 45ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்



நல்லூர் சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்
உரிமையாளர் **தீ.ப.குமணன்**
அவர்களின் அன்பு மாமனார்

அமரர்

**பெரியதம்பி பரமநாதன்**

அவர்கள் 09.04.2020 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யா/நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான தொண்டர்கள்**

(2877)



## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 |  | 19 |
| 08 | | 05 |
| 1945 | | 2020 |

### சபாரத்தினம் சர்வானந்தம்

நந்தாவில் அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சர்வானந்தம் அவர்கள் 19.05.2020 செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - பூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல் வனும், கணபதிப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மலிங்கம் - சரஸ்வதி, கோபாலகிருஸ்ணர் (ஆசன்) - வனிதா ஆகியோரின் ஆசை மருமகனும் (சகோதரி மகன்), காலஞ்சென்ற சர்வேஸ்வரரூபி மற்றும் சர்வேஸ்வரவிமோசனம் ஆகியோரின் அன்புக் கணவரும், சர்மிளா (லண்டன்), சர்மிலன் (லண்டன்), சர்வன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், லிங்கேஸ்வரன் (லண்டன்), வாசுகி (லண்டன்), வேனிக்கா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாலினி, கார்த்திகன், கபிலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், கிஷோர், கிஷானி, கிஷாந் (லண்டன்) ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், தட்சணாமூர்த்தி, சரோஜினிதேவி (கமலா), சொர்ணமலர் (கனடா), ஞானரூபி (கனடா), வசந்தரூபி (கனடா), கணேசமூர்த்தி, சாந்தரூபி (கொழும்பு), சத்தியமூர்த்தி (கனடா) மற்றும் காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வயிரவப்பிள்ளை, கலைவாணி, சுயம்புலிங்கம் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), மகேஸ்வரன் (கனடா), கருணாமூர்த்தி, சர்வேஸ்வரஜோய், சர்வேஸ்வர லலிதா, சர்வேஸ்வர செவ்வேள், செல்வ பாஸ்கரி, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரஜீவ் (வர்த்தக வங்கி), வைத்திய அதிகாரிகளான பிரவீணா, பிரசாந் மற்றும் கார்த்தி, கிருத்தி, துஷானந், துஷாந்தி, மொனிசிகா, பிரசாந் (கனடா), உமாயினி (ஆசிரியர்), ஜெனேஷன் (லண்டன்), வக்த்சளனி, சுலக்சனா (குடும்ப நல உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், சுஜாத்தா (கனடா), சுகிர்தரன் (கொழும்பு), சுதர்சன் (ஜேர்மனி), சுனிதா `(தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுஜீவா (கனடா), சுஜந்தினி (லண்டன்), சுதர்சினி (கனடா), சுதாகரன் (கனடா), சஞ்சீவ் (கனடா), அகிலன் (கனடா), லக்ஸ்மி (அவுஸ்திரேலியா), அபிராமி (அவுஸ்திரேலியா), கௌரி (கனடா), நிமலன் (கனடா), சமீரா (கொழும்பு), ஜெனித்திரா (கொழும்பு) ஆகியோரின் தாய் மாமனும் செந்தூரன் (கால்நடை திணைக்களம்), பிரசாந் (விரிவுரையாளர்), வஜனி, றெஜினா (பிரதேச செயலகம், நல்லூர்), வைத்தியர்களான பால முருகன், சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோகரன் (சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்) அவர்களின் அன்பு சித்தப்பாவும், காலஞ் சென்றவர்களான கமலநாதன் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்), கமலானந்தன் (வர்த்தகரும் பொதுச்சேவையாளரும்), மகேஸ்வரி (முன்னாள் ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகலனும், கஜகிருஷ்ணா (வர்த்தக வங்கி), கஜவர்சன் (மாணவன்), கஜலக்சன் (மாணவன்) ஆகியோரின் அன்புப் பேரனும் (டேய் மாமா), உதயசங்கரின் ஆசைப் பெரியப்பாவும் ரவீந்திர னின் அன்பு மைத்துனரும் பாலசுப்பிரமணியம் (கனடா) - தவமலர், பாலசிங்கம் - தவமணிதேவி (லண்டன்), குணசீலன் - மனோராதா (லண்டன்) ஆகியோரின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.05.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-9613)

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

021 205 2089

தகவல்: குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்.



## 31ம் நாள் நினைவஞ்சலி



**அன்புமாறன் கோகுல்**

(தரம் 6 மாணவன் - மட்டக்களப்பு இந்துக் கல்லூரி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06.12.2009 | 23.04.2020 |

எம் குலம் விளங்க வந்த
குலக் கொழுந்தே
பட்ட துயர் தீர பாலன் பஞ்சம்
பத்து வருடமென்பர்
பார் தன்னில்
பதினொரு வயதிலே
பாவி நாம்
பாலன் உன்னை இழந்து
பரிதவிக்கின்றோம் பாரினிலே
வருந்துகின்றோம்.

*உன் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்*

பிரிவால் துயருறும்

**பசுபதி - விஜயலட்சுமி**
**பேர்த்தி குடும்பம்**

*11, முத்தமிழ் வீதி, கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

(2878)

# ராஜபக்ஷக்களின் ஆட்சியின் விளைவே மாளிகாவத்தையில் இடம்பெற்ற அனர்த்தம்

**முஜிபுர் சாடல்**



(கொழும்பு)

**ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலங்களில் மக்களுக்காக எந்தவிதச் சலுகைப்பொதிகளும் பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியமில்லை என்று தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், ராஜபக்ஷக்களின் ஆறுமாத ஆட்சியின் விளைவே மாளிகாவத்தையில் இடம்பெற்ற அனர்த்தத்திற்கு பிரதான காரணம் எனவும் குற்றம்சாட்டினார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறுமாதகாலம் கடந்துள்ள நிலையில் அவர்கள் வழங்குவதாக குறிப்பிட்ட எந்தச் சலுகைப்பொதிகளையும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவில்லை. தற்போது மக்களது பணத்தை அரசாங்கத்திற்கு அர்ப்பணிக்குமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டினார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார பிரிவினர் பெரும் சேவையாற்றி வருகின்றனர். அவர்களது பாதுகாப்பிற்காக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளித்துவரும் வைத்தியசாலைக் குழுவினர், மூன்று அல்லது நான்கு பேர் ஒரே அறையில் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சுகாதாரப் பிரிவினருக்காக முன்னெடுக்கப்படும் ஓரிரு நலன்தரும் செயற்பாடுகளும் நாட்டிலுள்ள தனவந்தர்கள் மற்றும் வர்த்தகர்களின் உதவியுடனே மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கத்தின் செலவில் எவ்வகை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

உலக சந்தையில் எரிபொருள் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்து வருகின்ற போதிலும் அதனால் கிடைக்கப் பெறும் இலாபத்தைக்கொண்டு மக்களுக்கு எந்தவித சலுகைகளும் வழங்கப்படவில்லை.

தொடர்ந்தும் அரசாங்கம் தம்மிடம் நிதி இல்லை என்றே தெரிவித்து வருகிறது. வைரஸ் பரவல் காரணமாக அரசாங்கத்திற்கு பல நிதியுதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளபோதிலும், அதனை புறக்கணித்து வருகிறது. ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது சாத்தியமற்றதே. இதற்கு முன்னரும் சரி தற்போதும் சரி ராஜபக்ஷக்கள் நாட்டு மக்களுக்காக சலுகைப் பொதிகள் வழங்கத் தயாராக இல்லை என்பதை காண்பித்துள்ளனர்.

இவர்கள் ஆட்சியின் பலாபலனாகவே மாளிகாவத்தை சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது வரை காலமும் இலங்கை மக்கள் யாரும் இவ்வாறு பணத்தைப் பெற்றுக்கொள்ள திரளாக திரண்டு ஒருவரை ஒருவர் முட்டி மோதி உயிரிழந்துள்ளமைக்கான சாத்தியமில்லை.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம் ஆட்சியமைத்து ஆறுமாதமே கடந்துள்ள நிலையில் , மக்கள் பசியைப் போக்கிக் கொள்வதற்காக இவ்வாறு ஒன்றுகூடியுள்ளனர்.

நிதி வழங்கல் செயற்பாடு சட்டரீதியாக குற்றச்செயலாக கருதப்பட்டாலும், அது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து சட்டநடவடிக்கை எடுக்கலாம். ஆனால் மக்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கியமை தொடர்பில் நாட்டின் ஆட்சியாளர்களே பதில்கூற வேண்டும்.

நாட்டு மக்களின் இந்த நிலைமைக்கு யார் காரணம் என்பது தொடர்பில் அவர்களே தங்களுக்குள் வினவிக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## மனுக்கள் மீதான பரிசீலனை ஒத்திவைப்பு

(கொழும்பு)

2020 பொதுத் தேர்தலை ஜூன் 20 ஆம் திகதி நடத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையும், ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்த தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யக்கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று 5 ஆவது நாளாக பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று 5 ஆவது நாளாக இடம்பெற்று வந்த நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை வரை குறித்த மனுக்கள் மீதான பரிசீலனையை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. (ஜ-4)

## கடும் காற்றுடனான காலநிலையால் யாழில் 29 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கடும் காற்றுடனான காலநிலை காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை காலை வரை சுமார் 29 குடும்பங்களைச் சேர்ந்த 99 பேர் பாதிக்கப்பட்டனர் என மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வங்கக் கடலில் உருவாகிய அம்பன் புயலின் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதனுடைய தாக்கம் உணரப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் காற்றின் தாக்கமானது கடுமையாக உணரப்பட்டது.

நேற்றுக்காலை வரை கடும் காற்று காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 99 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டனர். 22 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. அத்துடன் கைதடிப் பகுதியில் பாடசாலை ஒன்றும் சேதமடைந்தது.

மேலும் சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் 5 பேர் பாதிக்கப்பட்டனர். நிலப்பகுதியில் காணப்படுகின்ற காற்றின் தாக்கத்தினை விட கடற்கரையை அண்டிய பகுதியில் காற்றின் வேகம் கூடுதலாகக் காணப்படுவதால் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்வதைத் தவிர்க்குமாறும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஜ-4)

## சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான கால எல்லை நீட்டிப்பு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரங்களின் காலத்தைத் தற்காலிகமாக நீட்டிக்கப் போக்குவரத்துச் சேவைகளின் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய குறித்த கால எல்லை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக, கடந்த மாதம் 16ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான செல்லுபடியாகும் காலம் மே 31 வரை நீட்டிக்கப்பட்டது.

இருப்பினும், நிலவும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, மே 31ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான செல்லுபடியாகும் காலம் ஜூலை 31 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## இடுகம கொவிட்-19 நிதியமீதி 1136 மில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புக்களுடன் இடுகம கொவிட் -19 சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1136 மில்லியனாக அதிகரித்துள்ளது.

**Canowin Hotel @SPAS (Pvt) Ltd** நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவை அன்பளிப்புச்செய்துள்ளதுடன், அதற்கான காசோலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

**Mascons (Pvt) Ltd** நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும், **Built Element Ltd** நிறுவனம் மூன்று மில்லியன் ரூபாவையும், சிறில் சமரஜீவ 250, 000 ரூபாவையும், **Exim House Distributors (Pvt) Ltd** நிறுவனம் 250,000 ரூபாவையும், **Exim House (Pvt) Ltd** நிறுவனம் 250,000 ரூபாவையும் டவர் மண்டப மன்றத்தின் பணிக்குழாம் 90,637.69 ரூபாவையும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிக்குழாம் மூன்று மில்லியன் ரூபாவையும், ஜே.பீ.தய்ானந்த டி சில்வா 100,000 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தனர்.

இடுகம கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் தற்போதைய மீதி 1,136,968, 139.71 ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்பு செய்து வருகின்றனர். சட்டரீதியான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்பு தொகைகள், வரி மற்றும் அந்நியச் செலாவணி சட்டதிட்டங்களில் இருந்து விடுவிக்கப்படும்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www. itukama.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது **#207#** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பைச் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# நாட்டில் வறுமை நிலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத விடயமாகும்

## கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சிறிமால் கூறுகிறார்

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் காரணமாக இலங்கையில் வறுமை நிலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத விடயம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் சிறிமால் அபயரட்ண தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறுமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் நகரப்பகுதிகளில் வாழும் வறிய மக்களே இவ்வாறு வறுமையால் அதிகளவு பாதிக்கப்படப்போகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் குறுகிய கால, நீண்டகால நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் குறுகிய காலத்தில் வறுமையைக் கட்டுப்படுத்துவதற்காக பல வழிகளில் நிதியை செலவிடவேண்டும் எனவும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பற்ற நிலையில் உள்ள இலங்கையருக்கு கொடுப்பனவுகளை வழங்கவேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வறியவர்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## இந்தியாவில் கொரோனா கோரத்தாண்டவம்; ஒரேநாளில் 6 ஆயிரத்து 88 பேர் பாதிப்பு

(டில்லி)

உலகைஉலுக்கிவரும் கொரோனாத் தொற்று இந்தியாவையும் அதிரவைத்துள்ளது.

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 6 ஆயிரத்து 88 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஒரேநாளில் அதிக எண்ணிக்கையிலான தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தியாவில் இதுவரையில் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 501 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவரையில் 3 ஆயிரத்து 585 மரணங்களும் பதிவு செய்யப்பட்டன.

கொரோனாத் தொற்று பரவலைத் தொடர்ந்து ஊரடங்கு நடவடிக்கைகள் நீடிக்கப்படுதலை இந்தியாவின் உள்துறை அமைச்சு கட்டாயமாக்கியது.

மகராஷ்டிராவிலேயே அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 13 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## உயிரிழந்தவர் உயிருடன்!

(மீகொட)

மீகொட-முத்துஹெனாவத்த பகுதியைச் சேர்ந்தவர் வாகன விபத்தொன்றில் உயிரிழந்ததாகக் கருதப்பட்ட நிலையில் குறித்த நபர் மீண்டும் வீட்டுக்கு திரும்பி வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இறந்து விட்டார் எனக் கருதிய 79 வயதான 6 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு வீடு திரும்பி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மீகொட பகுதியில் இடம்பெற்றது.

குறித்த முதியவர் வெல்லம் பிட்டிய பகுதியில் உள்ள ஒரு தொழிற்சாலையில் தொழில் செய்து வந்தார்.

ஊரடங்கு உத்தரவின் காரணமாக வீடு செல்ல முடியாமல் குறித்த நபர் தொழிற்சாலையிலேயே தங்கியிருந்தார்.

இதற்கிடையில் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அத்துருகிரிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் மீகொட-முத்துஹெனாவத்த பகுதியைச் சேர்ந்த குறித்த நபரை போன்ற தோற்றம் கொண்டவர் எனக் கூறப்பட்டதையடுத்து 79 வயதுடைய குறித்த நபரின் பிள்ளைகள் உயிரிழந்தவர் தமது தந்தை என பொலிஸாரிடம் உறுதிப்படுத்தி சடலத்தை எடுத்துச் சென்று இரண்டு நாட்களின் பின்னர் அடக்கம் செய்தனர். அதனைத் தொடர்ந்து தொழிற்சாலையில் தங்கியிருந்த 79 வயதான நபர் ஊரடங்கு தளர்த்தப்பட்டதன் பின்னர் தனது சொந்த வீட்டுக்கு வந்தார். உயிரிழந்தவர் உயிருடன் திரும்பி வருகின்றார் என அவரை கண்ட பிரதேசவாசிகள் அச்சம் கொண்டு தெறித்தோடினர். பின்னர் பொலிஸில் முறையிட்டனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து இவர் உண்மையில் 6 பிள்ளைகளின் தந்தையான குறித்த பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் அத்துருகிரிய பகுதியில் உயிரிழந்தவர் இவரை போன்ற உருவம் கொண்ட வேறு ஒரு நபர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டது. (ஜ-4)

## உலகை உலுக்கும் கொரோனா! பாதிப்பு 52 இலட்சத்தை நெருங்கியது




(ஜெனிவா)

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 52 இலட்சத்தை நெருங்கியதுடன் கொரோனா வைரஸ் தாக்குதலுக்குக் குணமடைந்தோர் எண்ணிக்க்கை 20 இலட்சத்தைக் கடந்தது.

கொரோனாவுக்குச் சிகிச்சை பெறுபவர்களில் 45 ஆயிரத்து 635 இற்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதுடன் கொரோனா வைரஸுக்கு உலகம் முழுவதும் 3 இலட்சத்து 34 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சுயமாகத் தயாரிக்கப்பட்ட நீர்வழங்கல் தொகுதி அன்பளிப்பு



(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள மாணவனால் தயாரிக்கப்பட்ட கைகழுவும் தன்னியக்க நீர் வழங்கல் தொகுதி குறித்த பிரதேச சபையின் தவிசாளரிடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு கரவெட்டி பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஹாட்லிக் கல்லூரி உயர்தரத்தில் கல்வி பயிலும் ஸ்ரீதரன் புஷ்கரன் என்ற மாணவனே குறித்த தன்னியக்க நீர் வழங்கல் தொகுதியை சுயமாகத் தயாரித்தார். குறித்த மாணவன் நெல்லியடி நகரை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தில் முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஜ-8-60)

## தணியாத கொரோனாவின் கோரமுகம் அமெரிக்கா,பிரேசிலை புரட்டி எடுக்கிறது

(வோஷிங்டன்)

கொரோனாவின் கோர முகம் இன்னும் தணியாத நிலையில் அமெரிக்கா மற்றும் பிரேசிலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் மட்டும் உயிரிழந்தனர்.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு மேல் பரவி பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தின நிலவரப்படி அமெரிக்காவில் 1,418 பேர் உயிரிழந்துள்ளதுடன் 28 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் தொற்றுக்குள்ளாகினர்.

அண்மைய நாட்களில் அதிகம் பாதிக்கப்பட்டுவரும் பிரேசிலில் இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் உயிரிழப்புக்கள் ஆயிரத்தைத் தாண்டின. நேற்று முன்தினம் மட்டும் அங்கு 1,188 பேர் உயிரிழந்ததுடன், 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஜ-5)

# வாகன நெரிசலை குறைக்க நடவடிக்கை



(கொழும்பு)

வீதிகளில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக நிறுத்தல் மற்றும் பயணித்தல் முறையை உடனடியாக அமுல் செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பரிந்துரை செய்தார்.

இதன்படி வீதிகளில் காலையிலும் மாலையிலும் வார நாட்களில் வாகன நெரிசலைக் குறை க்க அலுவலகங்களுக்கு வாக னங்களில் செல்வோரை பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணிப்பதை ஈர்க்கும் வகையிலான திட்டங்களை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கை போக்குவரத்து சபையை இலாபம் ஈட்டும் சபையாக மாற்றுவது தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்துடன் பாடசாலை சிறுவர்களுக்கான பேருந்து சேவைகள் மேம்படுத்தப்படவேண்டும் என்ற விடயம் கலந்துரையாடப்பட்டது. (ஐ-4)

**வலம்புரி**
**விளம்பர தொடர்புகளுக்கு**
**021 221 7603, 021 567 1532**


## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA
## ADMISSION

Grade 6 in 2021
Grade 1 in 2021 (விண்ணப்ப திகதி 19/06/2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.)
G.C.E.A/L (2022 Batch) in 2020 (விண்ணப்ப திகதி 19/06/2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது)

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளில் 26.05.2020 முதல் 19.06.2020 வரை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 19.06.2020 வெள்ளிக்கிழமை ஆகும். அத்திகதிக்குப் பின்னர் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

2. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 1000.00

3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.

4. வயதெல்லைகள்

- தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2015 க்கும் 31.01.2016 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்
- தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2010 க்கும் 31.01.2011 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்
- தரம் 12 (A/L 2022 Batch) விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருத்தல் வேண்டும்.

அதிபர்கள்

(C-9610)



## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.04.2020 வெள்ளிக்கிழமை அன்று ஜேர்மனியில் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர். **முருகேசு பாலசிங்கம்**



உங்கள் புன்னகை முகம்- எம்
மனதை விட்டு அகலவில்லை
நிழலாய் தொடரும் உங்கள்
நினைவுகளை மறக்க முடியவில்லை
காலங்கள் பல கடந்து
சென்றாலும் என்றும் உங்கள்
நினைவுடன்

**மலர்வு-15.06.1948**
**உதிர்வு-24.04.2020**

முருகேசு பாலசிங்கம் அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 24.05.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

82/11, பருத்தித்துறை வீதி,
3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(C-2876)

குடும்பத்தினர்.


## இராசிபலன்

23.05.2020
வைகாசி 10, சனிக்கிழமை
பிரதமை பின்னிரவு 12.37 மணிவரை
ரோகினி பின்னிரவு 5.16 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம்- சுவாதி
அமிர்தசித்தம்

வளவன்


மேஷம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் வரும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.


மிதுனம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.


கடகம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், போசன சுகமுண்டு.


சிம்மம்

அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.


கன்னி

தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.


துலாம்

விட்டுக் கொடுத்துச் செல்வதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வழிபாடு மகத்துவம் தரும்.


விருச்சிகம்

முயற்சிக்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடம் வந்து சேரலாம்.


தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முற்படுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


கும்பம்

மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தாய்வழி ஆதரவு கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்தியால் மகிழ்வடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


மீனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொழில் நலனுக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

கடவுளால் விரும்பப்படுவோர் தண்டித்து திருத்தப்படுவர்

# உயிர்கொல்லி கொரோனாவுக்கு எதிராக சுகாதார ரீதியாக போராடுவதேயன்றி துப்பாக்கி கொண்டு போராடுவது இல்லை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சாடல்

(முறிகண்டி)


கொரோனாவுக்கு எதிராக சுகாதார ரீதியாக போராடுவதேயன்றி துப்பாக்கி கொண்டு போராடுவது இல்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சாடினார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவக் கெடுபிடிகள் இங்கு அதிகளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் இந்த இராணுவ கெடுபிடிகள் அதிகமாக இருக்கிறது.

தென்னிலங்கையில் இவ்வாறான கெடுபிடிகள் இல்லாத சூழலில், கொரோனா அச்சுறுத்தல் இல்லாத பிரதேசத்தில் இவ்வாறு இராணுவ கெடுபிடிகள் அதிகம் காணப்படுகின்றமை சந்தேகத்தை அளிக்கிறது என்றும் போக்குவரத்து செய்கின்றவர்கள் பதிவு செய்து செல்ல வேண்டிய சூழல் காணப்படுவதுடன், அரசாங்கம் ஒருபடி மேலே சென்று முல்லைத்தீவில் இராணுவத்தினரால் வீடு வீடாகச் சென்று விபரங்களைத் திரட்டுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

சுகாதாரம் தொடர்பிலும் சரி, ஏனைய சிவில் நிர்வாகம் செய்யும் வேலைகளிலும் சரி இராணுவத்தினர் மேற்கொள்வது ஏற்புடையதல்ல,

கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த காலப்பகுதியில் இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர். தேவைக்கு மேலதிக இராணுவ குவிப்பு மக்களை பதற்றத்திற்குள்ளக்கியுள்ளது என்றும் கொரோனாவிற்கு எதிராகப் போராடுவது என்பது அது சுகாதார ரீதியில் போராடுவதேயன்றி துப்பாக்கி கொண்டு போராடுவது அல்ல.



இந்த யுத்தமானது கண்ணுக்கு தெரியாத கொரோனா வைரஸுக்கு எதிரான யுத்தம். அதனை செய்யவேண்டியது வைத்திய அதிகாரிகளும் சுகாதார அதிகாரிகளுமேயன்றி இராணுவத்தினர் அல்ல.

இவற்றைப் புரிந்து கொண்டு பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு தேவை யற்ற இராணுவ பந்தோபஸ்து களை குறைத்து பொதுமக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தேர்தலை நடத்த 70 நாட்கள் காலஅவகாசம் தேவையென்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்திருந்தார். தேர்தலை நடத்துவதற்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். அதே சுகாதாரத் துறையினர் சமூக நிகழ்வுகளில் அதிகளவானோர் கூட முடியாது என்ற விடயத்தையும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் நிலவி வருகிறது. ஆனாலும் ஒரு தேர்தல் ஒன்றை விரைவில் சந்திக்க வேண்டிய சூழலே தென்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-100)

# தனிமைப்படுத்தல் சட்டத்தில் கொரோனா ஒழிப்பு விதிமுறைகள் உள்ளடக்கப்பட வேண்டும்

## அனில் ஜாசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சுவட்டத்தில் கொரோனா ஒழிப்பு விதிமுறைகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா ஒழிப்புக்கான ஒழுக்க விதிமுறைகளை தனிமைப்படுத்தல் உள்ளடக்கும் போது சுகாதாரத் துறையினரின் வேலைத்திட்டங்களுக்கு உந்துசக்தியாக அமையும்.

ஊரடங்கு தளர்வில் உள்ள போதும் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றாது செயற்படும் போதும் வைரஸ் தீவிரமாகப் பரவ நேரிடலாம்.

இதனால் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான நடவடிக்கைகளை அடுத்த 2 வருடங்களுக்கு தொடர்ந்து பின்பற்றல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-8)

# பளையில் விபத்து இருவர் படுகாயம்



(முறிகண்டி)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடிப் பகுதியில் விபத்தில் இருவர் காயமடைந்தனர். குறித்த விபத்து நேற்றுக் காலை முல்லையடிப் பகுதியில் இடம்பெற்றது.

விபத்தில் சிக்கிய இருவரும் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஆட்டோ ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் ஆட்டோவில் பயணித்த இருவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியைச் சேர்ந்த வைரநாதன் சிவராசா (வயது-53), சுப்ரமணியம் துரைவீரசிங்கம் (வயது-71) ஆகியோரே இவ்விபத்தில் காயமடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்(ஜ-4-60-100)


# இரண்டாம் கட்ட கொடுப்பனவு தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## யாழ்.மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதலாம் கட்ட 5,000 ரூபா உதவிப் பணத்தினைப் பெற்ற அனைவருக்கும் இரண்டாம் கட்ட நிதி வழங்கப்படும். பொதுமக்கள் இது தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை என யாழ்.மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார். யாழில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


கொரோனாப் பாதிப்பின் காரணமாக அரசால் வழங்கப்படும் இடர் நிதியினை யாழ்ப்பாண மாவட்டத்தில் வதியும் ஏப்ரல் மாத உதவித் தொகையைப் பெற்ற ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக 5,000 ரூபா உதவித் தொகை கட்டாயமாக வழங்கப்படும்.



மேலும் யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களுக்கு 5,000 ரூபா உதவித்தொகை வழங்கப்பட்டது. இவ் உதவித் தொகை 76 ஆயிரத்து 32 சமுர்த்திப் பயனாளிகள், 11 ஆயிரம் சமுர்த்தி உதவி பெறக் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள், 39 ஆயிரத்து 473 பேர் தொழிலற்றவர்கள் மற்றும் 8 ஆயிரத்து 608 மேன்முறையீடுகள் மூலம் இணைக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் முதற்கட்டமாக உதவித்தொகை பெற்ற அனைவருக்கும் இரண்டாம் கட்ட உதவித் தொகை கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்ட 5,000 ரூபா கொடுப்பனவு கட்டாயம் வழங்கப்படும். எனவே இது தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அரசினால் வழங்கப்படும் நிதி வழங்கலில் உள்ள தாமதத்தின் காரணமாக மக்களுக்கு குறித்த உதவித் தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. எனினும் அது கிரமமாக அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் தங்களுடைய பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பொதுமக்கள் இரண்டாம் கட்ட கொடுப்பனவைப் பெற்றுகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4-9)

# பிரமாண்ட கிரிக்கெட் அரங்கு தொடர்பில் முன்னாள் வீரர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்



(கொழும்பு)

40 மில்லியன் டொலர் செலவில் அமையும் புதிய கிரிக்கெட் மைதானம் குறித்து. முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார உட்பட கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சுமார் 40 ஆயிரம் இருக்கைகளைக் கொண்ட நாட்டின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானம் ஹோமாகம பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கட்டுமானம் தொடருமா? என்பது தொடர்பாக இங்கு விவாதிக்கப்பட்டது. (ஜ-4)

# ஊரடங்கை மீறிய 528 பேர் கைது

(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணி நிறைவடையும் காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தினை மீறிய 528 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த காலப்பகுதியில் 150 வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கொரோனா உயிர் கொல்லி நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த கடந்த 20 ஆம் திகதி ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில், நேற்று வரையான காலப்பகுதியில் 61 ஆயிரத்து 621 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் 17 ஆயிரத்து 322 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. இதனிடையே ஊரடங்குச் சட்டத்தை மீறிய 18 ஆயிரத்து 496 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அவர்களில் 6 ஆயிரத்து 991 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஜ-4)


## தேவை

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஹொட்டல் ஒன்றிற்கு பகுதி நேரமாகப் பணியாற்றக்கூடிய சுத்திகரிப்பாளர், மற்றும் சமையலாளர் தேவை.

தொடர்புகளுக்கு:
077 946 7807, 021 222 3252
(2873)



## மணமக்கள் தேவை

1993 இல் பிறந்த அவுஸ்திரேலிய மணமகளுக்கும் 1993 இல் பிறந்த ஜேர்மன் மணமகளுக்கும் படித்த பட்டதாரி மணமகன்மார், 1981 சூரியன், செவ்வாய் பாவமற்ற கனடா மணமகனுக்கு மணமகள், இலங்கையிலுள்ள மணமக்களுக்கு இலங்கையிலேயே மணமக்கள் தேவை.

076 475 2219, 076 204 9298, 077 023 7639
(2871)



## அகவை அறுபதில்

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சின்னையா சோமசுந்தரம்

(BA,Dip.in Edu MED)

இறையருளால் என்றும் நல் ஆரோக்கியத்துடன் வாழ்க.



கைதடி, நாவற்குழி.

வாழ்த்தி மகிழும்: வே.இராமர்
ஓய்வுநிலை அதிபர்.

(2719)



## இல்லையே இயலாதே என்றுரையா ஆசான்

சின்னையா சோமசுந்தரம்

(BA,Dip.in Edu MED)

அவர்களின் நிறைபணி வாழ்த்து

24.05.1960-24.05.2020 (நாளை)



மணிவிழாக் காணும் மாண்புடை அதிபர்
பணியின்று ஒய்வுறுதா இல்லை, இல்லை
அணியணியா உயர் கல்விக்காய் மாணவரைப்
பேணிநீர் வளர்த்தீர் வளம்பல கண்டோம்.

சின்னையா சிறப்புறு நல்லம்மா இணைந்து
பொன்னையே தந்தார் புகழுடை சோமசுந்தரம்
தன்னையே செய்பணிக் கர்ப்பணிக்கும் தயாளன்
முன்னைநாம் செய்பலனிவர் எம்மூர்சிறக்க வந்தே

க.பொ.த. வகுப்பியங்கு கைதடி நாவற்குழி
அ.த.க. பாடசாலை வலயத்தில் மிளிரக்
காத்தாங்கு நிலைத்தீர் கணமேனும் ஒயீர்
சேர்ந்திலங்கு கல்வியும் ஒழுக்கமும் தந்தீர்

சொல்லிலும் செயலுயர்வு காட்டிய செம்மல்
இல்லையே இயலாதே என்றுரையா ஆசான்
தொல்லையே யென்றெம்மை ஒருபோதும் சொல்லீர்
பல்வகைப் பணிக்காய் பாங்குடன் இணைவீர்

வித்தகர் நீங்கள் விரும்பிய வாறிங்கு
நர்த்தகம் புரிவோம் நாமுமிங்கு ஒயோம்
புத்தகப் படிப்புடன் புதுமையும் கற்க
வைத்தவர் நீருலகில் வாழ்ந்திட தமிழாய்.

இறையருளால் என்றும் நல் ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்தும்
கந்தையா-கனகம்மா நிதியம்.

தச்சன்தோப்பு,
கைதடி.

(2718)




## கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 80 செவ் 3 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கடையில் வேலை செய்கின்றார் (யாழ்).<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10771 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HND in Bussiness Management. Finance Executive<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், விரிவுரையாளர், கணக்காளர் போன்றோர். R.C ஆம் ஏற்றுக்கொள்ளப்படும். அவுஸ்திரேலியா, கனடா விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/7818 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: - செவ் 12 இல்<br>உயரம்:157cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. கைத்தொழிற்பேட்டை, தோட்டம்,<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10772 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 12 செவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: விஞ்ஞான பட்டதாரி. ஆசிரியர்.<br>எதிர்பார்ப்பு: மணமகளின் தகைமையை விட கூடிய மணமகன்<br>தொ.இ: G/7819 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 16½ செவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: M.B.B.S Doctor<br>எதிர்பார்ப்பு: விரிவுரையாளர், பொறியியலாளர், பல்வைத்தியர், மருந்தாளர், போன்ற உத்தியோகம் பார்க்கும் மணமகன்.<br>தொ.இ: B/10774 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: - செவ் 5 ல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி. X-Ray எடுத்தல்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/7833 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. பிரான்ஸில் தொழில் புரிகின்றார்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10775 | பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: சுவாதி<br>தகைமை/தொழில்: Diploma in Journalism. ஊடகவியலாளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/7835 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தீயில் எரிந்த காடு!



(வாழைச்சேனை)

மட்டக்களப்பு - வாழைச் சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாசிக்குடா பிர தேசத்தில் சுமார் நான்கு ஏக்கர் காடு தீப்பற்றி எரிந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் பாசிக்குடா முருகன் ஆலய வீதியிலுள்ள அரச காணியே இவ்வாறு தீப்பற்றி எரிந் துள்ளது.

தீயணைப்புப் படையினர், பொலிஸார் மற்றும் இரா ணுவத்தினரின் உதவியுடன் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ-4)

# மோதலில் பெண் பலி!

(காலி)

காலி மாவட்டம்- மீடியாகொட பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஆறு பேர் காயமடை ந்தனர்.

மீடியாகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இர ண்டு குழுக்களுக்கு இடையில் இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றது. இம்மோதல் சம்பவ த்தின் போதே அவர் உயிரிழ ந்தார்.

மீடியாகொட வாகீஸ்வர வீதியைச் சேர்ந்த வெல்லகே காந்தி என்ற மூன்று பிள்ளை களின் தாய் ஒருவரே சம்பவ த்தில் உயிரிழந்தார்.

இந்த மோதல் சம்பவத்தில் பெண்ணின் கணவர், மகன், சகோதரர் உள்ளிட்ட சிலர் காய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மோதல் சம்பவத்தைத் தடுக்கச் சென்றவர்களே சம்ப வத்தில் கொலையுண்ட மற்றும் காயமடைந்தவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ஐ-4)

# லத்தீன் அமெரிக்காவில் வேலையின்மை 11.5 மில்லியனாக அதிகரிப்பு

(கிடோ)

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, லத்தீன் அமெரிக்காவில் கூடுத லாக 11.5 மில்லியன் மக்களை வேலையில்லாத நிலைக்கு தள்ளியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ) இணைந்து நேற்று முன்தினம் வியா ழக்கிழமை வெளியிட்ட கூட்டு அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

ஐ.நாவின் லத்தீன் அமெ ரிக்கா மற்றும் கரீபியன் பொரு ளாதார ஆணையம் (ஈ.சி.எல். ஐ.சி) மற்றும் சர்வதேச தொழி லாளர் அமைப்பு ஆகியவற்றின் புதிய மதிப்பீடு இப்பகுதியில் மொத்தம் 37.7 மில்லியன் மக்கள் இப்போது வேலையில் லாமல் உள்ளதாகத் தெரிவித்து ள்ளது.

அத்துடன், லத்தீன் அமெரிக் காவின் பொருளாதாரமும் 5.3 சதவீதம் சுருங்கும் என்றும் மதிப் பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

# பணிப்பாளர்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுத் திணை க்களம் மற்றும் பயங் கரவாத விசாரணைப் பிரிவின் பணிப் பாளர்களுக்கு இடமாற்றம், வழ ங்கப்பட்ட பொலிஸ் திணைக் களத்தினர் தெரிவித்தனர்.

கடமையின் நிமித்தம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகச் செயற்படும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமராச்சி திலகரத்ன மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் ஆகியோருக்கே குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டது என மேலும் தெரிவித்தனர். (ஐ-8)

# நிலவும் சீரற்ற காலநிலை 20 ஆயிரத்து 265 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 5 ஆயிரத்து 356 குடும் பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 265 பேர் பாதிக்கப்பட்டனர்.

நேற்றைய தினம் இடர் முகா மைத்துவ மத்திய நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யிலேயே இவ்விடயம் தெரிவிக் கப்பட்டது.

மேலும், அனர்த்தங்களால் இதுவரை 3 பேர் உயிரிழந் ததுடன், 4 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனும திக்கப்பட்டனர்.



அத்துடன், 142 குடும்பங் களைச் சேர்ந்த 608 பேர் தெரிவு செய்யப்பட்ட 34 பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட் டனர். (ஐ-4)

# துப்பாக்கிச்சூடு இருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவ மொன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 15 ஆம் திகதி கட்டு நாயக்க பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹீனட்டியன, மினுவாங் கொடை பிரதேசத்தில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்தில் 38 வயதுடைய ஒருவர் உயிரி ழந்தார்.

குறித்த நபர், கடையொன் றுக்குச் சென்று விட்டு வீடு திரும்புகையில் துப்பாக்கிச் சூட் டுக்கு இலக்காகிய நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கட்டு நாயக்க பொலிஸாரும் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின ரும் விசாரணைகளை முன் னெடுத்து வந்தனர்.

குறித்த விசாரணைகளுக்கு அமைய, இச்சந்தேகநபர்கள் இருவரும் கொலைக்கு பயன் படுத்தப்பட்ட உள்ளூர் துப்பாக் கியுடன் கொவின்ன பிரதேச த்தில் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்தது. (ஐ-4)

# ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

(கல்முனை)

அம்பாறை- கல்முனை அஸ் ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை யில் ஒரே சூலில் 3 குழந்தை களை பெண் ஒருவர் பெற் றெடுத்தார்.

கோமாரி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை குறித்த பகுதியிலுள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு சத்திரசி கிச்சை மூலம் ஒரு சூலில் 3 ஆண் குழந்தைகளை பெற்றெ டுத்தார். (ஐ-4)



# குரங்குக் கடிக்குள்ளான சிறுவன் படுகாயம்

(திருமலை)

திருகோணமலை - மட்கோ பிரதேசத்தில் குரங்கு கடித்ததில் சிறுவனொருவன் படுகாயமடை ந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டான்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, வீட்டில் இருந்து அருகில் உள்ள கடைக்கு காலை சாப்பாட்டை வாங்குவதற்காக நடந்து சென்று கொண்டிருந்த வேளையில் பின்னால் சென்ற குரங்கு காலை பிடித்த போது சிறுவன் கீழே விழுந்தான்.

இதனையடுத்து, சிறுவனை குரங்கு கடித்து காயப்படுத்திய நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். (ஐ-4)

# கொரோனா தொற்று காரணமாக தொழில் அமைச்சில் முறைப்பாடுகள்

(கொழும்பு)

கொரோனா தொற்றால் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரண மாக தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வது தொடர்பில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடை க்கப் பெற்றதாக தொழில் அமை ச்சு அறிவித்துள்ளது.

இதில் தனியார் நிறுவன ங்களிலிருந்து 87 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றதாக தொழில் அமைச்சின் செயலாளர் சரத் அபய குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தொழி லாளர்கள் வேலையிழந்துள் ளமை, சம்பளம் கிடைக்கப் பெறாமை மற்றும் சம்பளம் அறவிடப்படுகின்றமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொட ர்பில் தொழிற் சங்கங்கள், தொழிலாளர் குழுக்கள் என்பன வும் முறைப்பாடுகளை முன் வைத்திருந்தன.

கிடைக்கப் பெற்ற முறைப் பாடுகளை பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டது. தொழில் வழங்குநர்கள், தொழிலாளர்களுக்கிடையில் கலந்துரையாடல் நடத்துவதன் மூலம் இவ்வாறான பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியும் என அவர் மேலும் தெரிவித் தார். (ஐ-5-8)

# சடலங்களின் மீது ஏறி நின்று தேர்தலை நடத்த முனைகிறது அரசு

## ஹரிசன் சாடல்



(கொழும்பு)

ஆட்சியைக் கைப்பற்றி இந்தக் குறுகிய காலத்திற்குள் மக்களுக்கு தற்போது போன்று நெருக்கடியை ஏற்படுத்திய அரசாங்கமொன்றை இதுவரையில் நான் அறிந்ததில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிசன் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனநாயக ஆட்சியைப் புதைத்து விட்டு, எதேச்சதிகார ஆட்சியையே அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக குற்றஞ்சாட்டிய அவர் அரசாங்கம் சடலங்களுக்கு மேல் ஏறிநின்றாவது தேர்தலை நடத்தவே முயற்சிக்கிறது என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து இந்தக் குறுகிய காலத்திற்குள் நாட்டு மக்களுக்கு இது போன்ற நெருக்கடியை ஏற்படுத்தி வரும் தற்போதைய அரசாங்கம் போன்ற ஒரு அரசாங்கத்தை இதுவரையில் நான் பார்த்ததில்லை என்றும் கொரோனா வைரஸ் பரவலினால் மக்கள் பாதிப்படைந்துள்ள நிலையில் அதிலும் தமது அரசியல் இலாபத்தை பெற்றுக் கொள்வது தொடர்பிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது என்றும் எரிபொருளால் கிடைக்கப்பெறும் இலாபத்தை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை அரிசியை சலுகையான முறையில் விநியோகிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிலை. இன்று பல அரிசி ஆலைகளில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவதானம் செலுத்தி மக்களுக்கு சலுகையான முறையில் அரிசி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் கொரோனா நெருக்கடியின் மத்தியில், பிணங்கள் மேல் ஏறியாவது பொதுத் தேர்தலை நடத்தும் நோக்கிலேயே செயற்பட்டு வருகிறது.

தேர்தலை நடத்துவது தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் இடம் பெற்று வருகின்ற நிலையில், நீதித்துறை சுயாதீனமான முடிவை எடுக்கும் என்றே நாங்கள் எதிர் பார்க்கின்றோம்.

பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போதில்லை என்று நாங்கள் அறிவுறுத்தி வந்த நிலையில், தேர்தல்கள் ஆணையாளரும் இன்னமும் 10 வாரங்களாவது பொறுத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக சிறந்த வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லை என்றும் இதனால் எதிர்காலத்தில் விவசாயிகள் நஞ்சருந்தி உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் எதற்கென்றாலும், இராணுவத்தினரை இணைத்துக் கொண்டு செயற்பட்டு வரும் அரசாங்கம் ஜனநாயகத்தைப் புதைத்து விட்டு, எதேச்சதிகாரத்தை முன்னெடுப்பதாகவே தோன்றுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் இவர்களுக்கு தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மூன்று பெண்கள் உயிரிழப்பு; அறுவருக்கு விளக்கமறியல்



(கொழும்பு)

கொழும்பு, மாளிகாவத்தையில் மூன்று பெண்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வர்த்தகர் உட்பட 6 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் புனித நோன்பு காலப் பகுதியில், ஏழை எளியவர்களுக்கு பண உதவி வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை ஒன்றின்போது ஒன்று திரண்ட மக்களால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி மூன்று பெண்கள் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்பு 10, மாளிகாவத்தை, ஜும்ஆ மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான மோட்டார் வாகன உதிரிப்பாக களஞ்சிய வளாகத்தில் இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் 3 பெண்கள் உயிரிழந்ததுடன் 8 பேர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டதாகவும் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் லயனல் முஹந்திரம் தெரிவித்தார்.

இதேவேளை, எவ்வித கவனமும் இன்றி மிக ஆபத்தான முறையில் நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்தமை, ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் அதனை மீறி மக்களை ஒன்று திரட்டியமை, கொவிட் 19 தொற்று பரவல் தொடர்பில் தனிமைப்படுத்தல் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய சமூக இடைவெளியை பேணாமல் நடந்து கொண்டமை, மூன்று பேரின் மரணத்துக்கு காரணமாக இருந்தமை தொடர்பிலேயே இந்த ஆறுபேரையும் கைது செய்ததாக மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்த்தகர் உள்ளிட்ட 6 பேரும் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை கொழும்பு பிரதம நீதவானால் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (ஐ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2043

### துளசி



அழகிய உறவுகள் கிடைப்பது எளிது அதில் அன்பான உள்ளம் இருப்பது அரிது

### சசிராஜ்

உலகிலேயே செய்கூலி, சேதாரம் இல்லாமல் கிடைக்கும் நகை "புன்னகை" மட்டுமே.



### மேகலா



ஒழுங்கா சாப்பிடு... இல்லேன்னா பூச்சாண்டி கிட்ட பிடிச்சு கொடுத்திடுவேன்...
நீ அப்படி அடம் பிடிச்சதாலதான் உன்னை அப்பாகிட்ட பிடிச்சுக்குடுத்திட்டாங்களா அம்மா?

### சரண்



தரகரே! பொண்ணு கறுப்பாயிருந்தாலும், சிவப்பாயிருந்தாலும் பரவாயில்லை. ஆனா பொண்ணு கண்டிப்பா ஸ்மார்ட் போன் வச்சிருக்கனும்.
தரகர்: ஏன் சேர்?
ஏன்னா ஸ்மார்ட் போன் வச்சுருக்கிற பொண்ணு தான் குனிஞ்ச தலை நிமிராம போகும்!!!

### அபிலாஸ்



வலி கொடுத்து பிறந்தாலும் பிள்ளைக்கொரு வலியென்றால் துடிக்கிறது! "தாய்மை"

### சுமதி

குடிக்க பணம் கேட்டு தகராறு செய்த கணவரை போட்டுத்தள்ளி விட்டு பொலிஸில் சரணடைந்த மனைவி!



குடிகார கணவன்மார்களே ஜாக்கிரதை!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தாக்குதலாளிகளுக்கு நடவடிக்கை எடுக்காதது ஏன்? கிளிநொச்சி பொலிஸாருக்கு எதிராகப் போராட்டம்

## யூனியன் குளம் மக்கள் முன்னெடுப்பு

(முறிகண்டி)

**கிளிநொச்சி பொலிஸாருக்கு எதிராக யூனியன்குளம் குடியிருப்பு மக்கள் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு முன்பாக இடம்பெற்றது.**



கடந்த மாதம் 28 ஆம் திகதி குறித்த பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்தும், பாதிக்கப்பட்ட நபர் நீண்ட காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சந்தேக நபர்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கியதாகவும் குற்றச்சாட்டி அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ஒருவர் தலையில் வெட்டுக் காயங்களுக்குள்ளானார். அதற்கு நீதி கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் சாட்சியம் அளித்த நபர்களை இலக்கு வைத்து நேற்று முன்தினம் கைதுகள் இடம்பெற்றதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் நிறைந்த காலப்பகுதியில் சமூக இடைவெளியைப் பேணியவாறு குறித்த கவன ஈர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஜ-2-5-100)

## தனிமைப்படுத்தலில் இருந்த 6 கடற்படையினருக்கு கொரோனா

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்படையினர் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று மேலும் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோனாத்தொற்று இருப்பதாக இனங்காணப்பட்ட ஆறு கடற்படையினரும் வெலிக்கந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சுகந்தன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,


தனிமைப்படுத்தலுக்காக வெலிசறையிலிருந்து கேப்பாபிலவு விமானப்படைத்தளம் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அண்மையில் 400 கடற்படையினர் கொண்டுவரப்பட்டனர்.

அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களில் 99 பேருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டவர்களில் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் வெலிகந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் மேலும் ஆறு பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதால் அவர்களும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-5-281)

## மண் அகழ்வை எதிர்த்துப் போராட்டம்

(நெளுக்குளம்)

செட்டிகுளம் கல்நாட்டிப் பகுதியில் மண் அகழ்வை எதிர்த்து மக்கள் நேற்றுக் காலை போராட்டம் ஒன்றை நடத்தினர். மேற்படி சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர் மண் அகழ்வில் ஈடுபட்டவர்களிடம் அனுமதிப்பத்திரத்தை கோரிய போது அவர்களிடம் எதுவுமிருக்கவில்லை. எனவே மண் அகழ்வை நிறுத்துமாறும் உரிய முறையில் அனுமதி பெற்று மண் அகழ்வை மேற்கொள்ளுமாறும் கூறியதை அடுத்து அப்பகுதி மக்கள் அவ்விடத்தை விட்டகன்றனர். (2-5-299)



கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் விடுதி மீது பாரிய மரம் முறிந்து விழுந்ததில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்ததுடன்விடுதியும் சேதமடைந்தது. (5-315)

## சிரமதானம்



(முறிகண்டி)

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனையினால் நேற்றுக் காலை 8.30 மணியளவில் சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக ஏ-9 வீதியின் இருமருங்கிலும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதில் உக்கும், உக்காத கழிவுப் பொருட்கள் சுகாதார முறைப்படி அகற்றப்பட்டது. குறித்த சிரமதானப் பணியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(2-5-100-316)




## மருதங்குளம் புனரமைப்பினால் சிறுபோக பயிர்ச் செய்கை முன்னெடுப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம் கடந்த ஆண்டில் உடைப்பெடுத்த மருதங்குளத்தை தற்காலிக புனரமைப்புச்செய்ததையடுத்து சுமார் 58 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச்செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான மருதங்குளம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த கடும் மழையால் குளத்தின் வான் கதவுப் பகுதியில் உடைப்பெடுத்த நிலையில் குறித்த குளத்தின் நீரைச்சேகரிப்பதற்கு நீர்ப்பாசனத்திணைக்களம், இராணுவம் மற்றும் விவசாய அமைப்புக்கள் இணைந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் குறித்த உடைப்பினை கட்டுப்படுத்த முடியாது போனது. இதனால் காலபோகச்செய்கையில் குளத்தில் நாலு அடி தண்ணீரை மாத்திரம் சேமித்து கால போகச் செய்கையை முன்னெடுக்க முடிந்தது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப்பொறியியலாளர் என்.சுதாகரன் மற்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசனப்பொறியியலாளர் கை.பிரகாஸ் ஆகியோரின் விடாமுயற்சியால் உடைப்பெடுத்த குளத்தின் வான்பகுதி தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு ஒன்பது அடி நீர்கொள்ளளவைக்கொண்ட இக்குளத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக ஐந்து அடி நீர் சேமிக்கப்பட்டதையடுத்து, சிறுபோகச்செய்கைக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 20 ஆம் திகதி இது தொடர்பாக விவசாயிகளுடனான கலந்துரையாடல் இடம்பெற்று 48 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியச்செய்கையும் மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டு குளத்து நீர் விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்காக பிரதி மாவட்ட நீர்ப்பாசனப்பொறியியலாளரால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.(2-5-315)

## பாறியது பாரிய மரம் போக்குவரத்து ஸ்தம்பிதம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் வீசிய கடும் காற்று காரணமாக முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு-பரந்தன் பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்று வீதிக்கு குறுக்காக வீழ்ந்தால் சுமார் இரண்டு மணி நேர போக்குவரத்து ஸ்தம்பிதமானது.

தகவலறிந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உடனடியாக மரத்தினை அகற்றி போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5-281)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—205

## தகவல் பரிமாற்ற இணைப்பில் பசுமை வேர்களும் இணையவழி கற்கையும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

கொரோனா வைரஸினால் ஏற்பட்ட தாக்கம் இன்னமும் தீர்ந்தபாடில்லை. இதனால் இனிவரப்போகின்ற காலங்கள் எப்படியிருக்கப்போகின்றன என்பதனைக்கூட அனுமானிக்க முடியவில்லை. உலக சுகாதார நிறுவனமும் மருத்துவ உலகமும் இன்னமும் மக்களுக்கு அவதானமாக இருங்கள். மிக அவதானமாக வெளிச் செல்லுங்கள், விதிமுறைகளைக் கவனமாக கையாளுங்கள் என மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியே வருகின்றன. இருப்பினும் பொருளாதார நலன் கருதி மக்களைப் பாதுகாக்கின்ற அதே நேரத்தில் அவர்களது உற்பத்திப்பொருட்கள் பல அறுவடை செய்தும் அறுவடைசெய்வதற்கு தயாராகவும் இருக்கின்றதென பலர் தெரிவித்திருக்கின்றார்கள். உற்பத்தியாளன் நட்டமடைந்தால் உற்பத்தி நின்று போய்விடும். அதன்பின்னர் நாம் அடுத்தவேளைக்கு பணமிருந்தும் கையேந்தும் நிலைக்கு வந்து விடுவோம். வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் பல விவசாயப் பெருமக்கள் தமது உற்பத்திப் பொருட்களை தகுந்த விலைக்கு விற்க முடியாமல் திண்டாடுவதனைப் அறியக்கூடியதாக இருக்கின்றது. உற்பத்தியாளனின் விளை நிலத்திலுள்ள விரைவில் பழுதடையக்கூடிய மரக்கறி வகைகளை அறுவடை செய்தவுடன் சந்தைப்படுத்த முடியாமல் ஊர புதிய அமைப்பை உருவாக்கி அதில் பசுமை வேர்களின் உற்பத்தியாளர்கள் என்னும் 076 6618075 இலக்கத்திற்கு வைபர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பசுமை வேர்கள் எனும் அமைப்பு விவசாயிகளின் சந்தைப்படுத்தலை இலகுவாக்குவதற்கு வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களின் தகவல்கள் சுருக்கமாக பதிவேற்றம்செய்யப்படல் வேண்டும். பொருட்களை விற்க விரும்புபவர்களினதும் வாங்க இருப்பவர்களது தகவல்கள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுவதனாலும் இலகுவில் இருவரும் தொடர்பு கொண்டு பொருட்களை விற்க, வாங்க முடியும். மேலும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பயிர் முற்றுதலடைந் செயற்றிட்டத்தை வெற்றிகரமானதாக்க முயற்சி செய்கின்றது. விவசாய மாணவர் ஒன்றியம் தவிர்ந்த ஏனைய மாணவர்களும் சமகாலத்துக்குத் தேவையான பங்களிப்பைச் செய்வதற்காக இதில் இணையலாம். மேலும் உற்பத்தி பொருட்கள் சம்பந்தமான செய்திகளை இந்த இணைய வசதியுடனான தேசமெங்கும் தேவைப்படும் சித்த மருத்துவ மூலிகைகளை பயிர்ச்செய்கை செய்வதற்காக இன்னும் மருத்துவ குணமுடைய பயிர்களையும் பயிரிட்டு அதனை சுத்தமானதாக, சுகாதாரமானதாக பொதி செய்து விற்பதன் மூலம் பயன் பெறலாம்.

கிராமங்கள் தோறும் பொருட்களை வாங்கி விற்பதற்கான

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 218

பொருளாதாரம் மற்றும் ஊதியம் என்பனவற்றை அடிப் படையாக வைத்து சில துணிச்சலான முடிவுகளை அரசாங்கம் எடுக்க முடிந்தாலும் மக்களாக நாம் முழுமையாக ஒத்துழைத்தாலன்றி கொரோனா தாக்கத்திலிருந்து எமது நாட்டை விடுவிப்பது கடினமானதாக இருக்கும்.

கொரோனாவுக்குமுன் கொரோனாவின் போது... எனத்தான் எண்ணத் தோன்றுகின்றது. கொரோனாவுடன் சேர்ந்து நாமும் வாழப்பழக வேண்டும் என்னும் கருத்து தற்போது வலுப்பெற்று வருகின்றது. கொரோனாவுக்கு பின் என்பதற்கு காலம் நேரம் அனுமானிக்க முடியாததாகையால் இப்போதைக்கு இப்படியே வைத்துக் கொள்வோம். இன, மத பேதங்களை விடுத்து அனைவரும் ஒன்றுபட்டாலேயன்றி எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போய்விடும். மருத்துவ உலகம் பரிந்துரைத்த அனைத்து முறைகளையும் நாம் கண்டிப்பாக கடைப்பிடித்தேயாக வேண்டும்.

இவ்வளவு காலமும் ஊரடங்கினை முழுமையாக கடைப்பிடித்தமையால் இவ்வைரஸினுடைய பரவல் இயன்றளவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இனி ஊரடங்கினை தளர்த்தும் போது தான் பிரச்சினை அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளதாக பலரும் அறிவுறுத்துகின்றார்கள். இதனை நாம் வேதவாக்காக கேட்டு எம்மையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்க வேண்டும். அலுவலகப் பணியென்றாலும் எமக்கான பாதுகாப்பினை உறுதிசெய்து அதனைச் செய்ய முயற்சிக்கலாம்.

எமது சேவையை எதிர் பார்த்து பலர் இருப்பதனால் எமது வேலையை நாம் செய்யாது இருப்பதும்தவறாகும். எமக்காகவும் மற்றையவர்களுக்காகவும் வாழும் வாழ்க்கைக்குள் கொரோனா தற்போது அனைவரையும் இழுத்து வந்திருக்கின்றது.

விவசாயப் பெருமக்களின்




டங்கு போடப்பட்டிருப்பதனாலும் இன்னும் குறிப்பாக மரக்கறிப் பயிர்கள் அறுவடைசெய்தபின் பாதுகாத்து வைக்க முடியாதிருப்பதனாலும் விவசாயிகளையும் விற்பனையாளர்களையும் இன்னும் நுகர்வோர்களையும் இணைப்பதற்கான முதற்திட்டம் தயாரானது. இங்கே உற்பத்தியாளனின் முழு விபரம் குறிப்பாக அவர் சந்தைப்படுத்த நினைக்கும் பொருட்கள் எப்போது சந்தைப்படுத்த முடியும், அத்துடன் பொருட்களின் விலை விபரம் இவற்றுடன் அவருடைய கைப்பேசி எண் என்பனவற்றை பரிமாறுவதனால் பொருட்களை வாங்கி வாணிபம் செய்பவர்களிடம் இந்த தகவல் தொடர்பாடல் இணைவை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். குறிப்பாக குறிப்பிட்ட விவசாயப் பெருமக்கள் மரக்கறிப் பயிர்களை அதிகளவில் உற்பத்தி செய்திருக்கின்ற நிலையில் விவசாயி நட்டப்படக்கூடாதென்ற கொள்கையில் அந்த பொருட்களுக்கான சந்தைவாய்ப்பை தேடியேற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இதற்காக மனிதவள அபிவிருத்திக்கான இணைந்த வலைப்பின்னல் அமைப்பும் (United Networking for Human Development-UNHD) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய மாணவர் ஒன்றியமும் இணைந்து பசுமை வேர்கள் என்னும் ஒரு

தால் அதனை இந்த எண்ணுக்கு அறிவித்தாலும் அவர்கள் பொருட்களின் விபரங்களை குறிப்பிட்ட எண்ணுக்கான வைபருக்கு அறிவித்தால் அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு செய்ய முடியும். இதற்காக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு விவசாய மாணவர்களது வைபர் குழுக்களூடாக செயற்பாடுகள் தொடரப்பட்டன.

விவசாய மாணவர்களினால் இந்த கைப்பேசி இலக்கம் பயன்படுத்தப்படுவதனால் இதில் உற்பத்திப் பொருட்களை அவற்றின் தரத்திற்கேற்ப விற்பனை செய்வது மற்றும் வாங்குபவர்கள் விவசாயிகளின் கைப்பேசி எண்ணுக்குத் தொடர்பு கொண்டு விற்பனையிலுள்ளவற்றின் விபரங்களை அறிந்து பயன்பெறலாம். இதனூடாக பொருட்களின் குறிப்பாக விலைப்பட்டியலும் தகவலாக பரிமாறப்படும். விலைப்பட்டியல் விவசாயப் பெருமக்களுக்கு ஏமாற்றமடையாது சரியான விலைக்கு தமது விளைபொருட்களை விற்பதற்கு வழியேற்பட்டிருக்கின்றது. இந்த எளிய முயற்சி விவசாய மாணவர்களுக்கு சந்தைப்படுத்தல் சார்ந்து கற்பதற்கும் தகவல்களைப் பரிமாறுவதால் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கவும் உதவியாக இருக்கும்.

இந்த நடைமுறைக்காக விவசாய மாணவர் ஒன்றியம் மாணவர்களை ஒருங்கிணைத்து இச் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்தந்தப் பகுதி விவசாப் பெருமக்களுக்கும் இது பிரயோசனமாக இருப்பதுடன் மாணவர்களை இலத்திரனியல் வர்த்தகத்தினுள் உள்வாங்கி கொள்ளலாம். கைப்பேசியூடான தகவல் பரிமாற்றம் இங்கு இலகுவாக, எளிமையாக நடைபெறுவதனால் அனைவரும் இதனை பயன்படுத்துவதன் மூலம் இலத்திரனியல் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் இதுபோன்ற மின்னியல் வர்த்தகத்தை உருவாக்குவதற்கும் வழிபிறக்கும்.

கிராமங்களை தொழில்நுட்ப கிராமங்களாக மாற்ற வேண்டுமென்ற திட்டம் பல ஆண்டுகளாக கருக்கொண்டாலும் கொரோனாவின் தாக்கத்தின் விளைவாக மக்களும் குடும்பங்களும் தனிமைப்படுத்தப்பட்டு நகரமுடியாத நிலைக்கு சென்று வந்திருக்கின்றோம். இளையவர்களை விரைந்து இந்த தொழில்நுட்பத்தை உள்வாங்கச் செய்வதன் மூலமும் உற்பத்தியாளனின் எதிர் பார்ப்பை இவ்வாறான தகவல் பரிமாற்றம் ஓரளவிற்று சீர்செய்யும் என நம்பலாம்.

விவசாய மாணவர் ஒன்றியத்திலுள்ள மாணவர்களுடன் ஏனைய பீடங்களின் மாணவர்களும் இணையும் போது இது முழுமையான வெற்றி தரும் எனக் கூறலாம். இந்த அரிய முயற்சிக்கு அனைவரும் கை கொடுங்கள்.

உற்பத்தியாளனையும் நுகர்வோரையும் இணைக்கும் உறவுப்பாலமாக வேர்கள் அமைப்பின் இந்த வைபர் இணைப்பு அமைந்திருக்கின்றது. வாருங்கள் இது எமக்கான கடமை.

உற்பத்தி செய்தவனின் உற்பத்திப் பொருட்களை சிறந்த விலைக்கு விற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள இலத்திரனியல் வர்த்தகத்தை இன்னும் பரவலாக்குவோம். இதன் மூலம் நடுத்தரகர்களின் முனைப்பையும் வெகுவாகக் குறைத்துக் கொள்ளலாம்.

இதுபோன்ற காலங்களில் விவசாயப் பெருமக்களைக் காப்பாற்றும்இவ்வாறான இணைப்புக்களை விரைந்து மேற்கொள்ள வேண்டும். கொவிட் 19 வைரஸின் தாக்கத்திற்குப் பிந்திய எம்மை நோக்கிய உணவுப் பஞ்சத்தை நாம்வெற்றி கொண்டாக வேண்டும். அனைவரும் இணைந்தால் வெற்றி கிடைக்கும்.

தொழில்நுட்பத்தை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கினால் உணவுற்பத்தி பாரியளவில் வீழ்ச்சியடைய சாத்தியமில்லை. மாறாக இலங்கையைப் பொறுத்தளவில் விவசாயச் செய்கை நடைபெறுவதற்கு தடைகள் இடாவிட்டால் விவசாயிகள் அனைவரும் உணவு உற்பத்தி செய்வார்கள். ஆனால் அவர்களது சந்தை வாய்ப்பினை முறையாக செய்து கொடுக்க உள்ளூர் சபைகளும் மாகாண சபைகளும் முழுமையாக முன்வர வேண்டும்.

இதனை அவரவர் கவனத்திற்கெடுத்தால் நிச்சயமாக விவசாயத்தையும் விவசாயப் பெருமக்களையும் இன்னும் பிற தொழிலிலுள்ளவர்களை பகுதியாகவேனும் விவசாய உற்பத்தியில் ஈடுபட ஊக்குவிக்கலாம். இதற்குத்தான் சொல்லி வைத்தார்கள்.


**நன்றே செய்க அதனை இன்றே செய்க.**

# மருந்து விநியோகத்தின் போது எவ்விதத் தட்டுப்பாட்டுக்கும் இடமளிக்காதீர்

## மருந்தாக்க கூட்டுத்தாபனங்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

**மருந்து விநியோகத்தின் போது எவ்விதத் தட்டுப்பாட்டுக்கும் இடமளிக்க வேண்டாம் என பணிப்புரை விடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த வருட கேள்வி மாதிரியை ஆராய்ந்து அதற்கடுத்த வருடத்தின் மருந்துத் தேவையை தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனங்கள் இரண்டினது தலைவர்களுடன் மருந்துப் பொருட்கள் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது நாட்டினுள் மருந்து விநியோகம் தொடர்பில் ஜனாதிபதி வினவியதற்கு பதிலளித்த அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன மூன்று முறைமைகளின் கீழ் மருந்து விநியோகம் இடம்பெறுவதாகவும் அவை அரசதுறை உற்பத்தி, தனியார் துறை உற்பத்தி மற்றும் இரு துறைகளினதும் இறக்குமதி என்றும் தெரிவித்தார்.

நாட்டினுள் சுமார் 750 மருந்து வகைகள் பயன்படுத்தப்படுவதாகவும், இறக்குமதியின் போது கொள்வனவு நடைமுறைகளுக்கு சில மாதங்கள் செல்வதால் சிலநேரம் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மருந்து விநியோகத்தின் போது எவ்விதத் தட்டுப்பாட்டுக்கும் இடம்வைக்க வேண்டாம் என பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, கடந்த வருட கேள்வி மாதிரியை ஆராய்ந்து அதற்கடுத்த வருட்த்தின் மருந்துத் தேவையை தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இடைத்தரகர்கள் பலர் இலாபமடைவதற்கு இடமளிக்காது மக்களை கருத்திற்கொண்டு மருந்து உற்பத்தியும் விநியோகமும் முறைப்படுத்தப்பட வேண்டும்.

மருந்து இறக்குமதி மற்றும் விநியோர்கத்திற்காக எளிமையான முறைமையொன்றை தயாரிப்பது முக்கிய தேவையாகும். அனைத்து மருந்துகளும் உயர் நியமங்களுடன் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, தரம் குறைந்த மருந்து உற்பத்திக்கு அல்லது இறக்குமதிக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் பணிப்புரை விடுத்தார்.

பற்றாக்குறை ஏற்படுவதை தடுப்பதற்காக பாதுகாப்பாக கையிருப்பை பேணவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி , மருந்துகள் காலாவதியாகும் திகதியை கணக்கிட்டு கொள்வனவு அனுப்பாணை விடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளுக்கு தேவையான 80 மருந்து வகைகளை தமது நிறுவனம் உற்பத்தி செய்வதாக குறிப்பிட்ட அரச மருந்துப்பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் உத்பல இந்திரவங்ச சேலைன் உட்பட மேலும் பல மருத்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதன் மூலம் வருடமொன்றுக்கு சுமார் 130 கோடி ரூபாவை மீதப்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் சமுர்த்தி இயக்கத்திடம் உள்ள நிதியை மருந்து உற்பத்தி தொழிற்றுறையில் முதலிடுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இக்கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

அவ்வாறானதொரு முறைமை தயாரிக்கப்பட்டால் இவ்விரு நிதியத்திற்கும் நிரந்தர வருமானமொன்று திறக்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க மற்றும் திறைசேரியின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ஜ-4)

# பொதுத்தேர்தலுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்தமை ஜனநாயக உரிமையை கேள்விக்குறியாக்கியுள்ளது

## திஸ்ஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கு எதிராக நீதிமன்றில் எதிர்த்தரப்பினர் மனுத்தாக்கல் செய்து மக்களின் ஜனநாயக அடிப்படை உரிமையினை கேள்விக்குறியாக்கியுள்ளனர் என்றும் கொரோனா வைரஸை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்ற செயற்பாடாகும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுத்தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி நடத்துவதை கேள்விக்குட்படுத்தி எதிர்த்தரப்பினர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்து மக்களின் ஜனநாயக அடிப்படை உரிமையினை இல்லாதொழித்ததுடன், கொவிட்-19 வைரஸை கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்த்தரப்பினர் ஆரம்பத்தில் இருந்து ஒத்துழைப்பும் வழங்கவில்லை.

தங்களின் சுய நல அரசியல் தேவைகளை மாத்திரம் கருத்திற் கொண்டு அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளனர்.

கொரோனா வைரஸை முழுமையாக இல்லாதொழித்த பின்னர் தான் பொதுத்தேர்தலை நடத்த முடியும் எனக் கருதுவது சாத்தியமற்றது. பாதுகாப்பான முறையில் தேர்தலை நடத்துவது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பணமும் பையனும்!

“அப்பா ஒரு ஐந்நூறு ரூபா பணம் கொடுங்கள். அவசரமாகத் தேவைப் படுகிறது” என்றான் பையன்.

“எதுக்குடா?” என்று கேட்டார் அப்பா.

“என் பிரெண்ட்ஸ் கூட சேர்ந்து பிக்னிக் போகப் போகிறேன்” என்றான் பையன்.

‘‘இப்ப எதுக்குடா அதெல்லாம்’’ என்றார் அப்பா. உடனே பையனுக்கு கோபம் வந்து விட்டது.

“மாதம் ஐயாயிரம் சம்பாதிக்கிறீர்கள். உங்களுக்கு நான் ஒரே பையன். ஒரு 500 ரூபா கொடுக்கிறதுக்கு இவ்வளவு கணக்குப் பார்க்கிறீர்களே!” என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியிலே போய் விட்டான்.

இது வீட்டுக்கு வீடு நடக்கிற ஒரு விடயம். இதற்கு என்ன காரணம்?

பணத்தின் மதிப்பு பையனுக்குத் தெரியவில்லையென்று அர்த்தம். பிள்ளைகளுக்கு பழக்கவழக்கத்தை சொல்லிக் கொடுக்கிறது மட்டும் முக்கியமில்லை. பணத்தை கையாள்வது எப்படி என்பதையும் சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படி நாம் செய்வதில்லை. அதனாலேதான் பெரியவனான பிறகு இப்படி கேட்டுவிட்டுப் போறான்.

வரவு–செலவு என்றால் என்னவென்று தெரியாமலே வளர்ந்து விடுகிறவர்கள் தான் அதிகம். அதனாலே பிற்காலத்திலே மிகவும் சங்கடப்பட வேண்டியிருக்கும்.

நாமெல்லாம் நம் பிள்ளைகளுக்குப் பழக்கவழக்கத்தோடு பண விடயத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

சரி அதை எப்படி கற்றுக் கொடுக்கிறது? அதற்கு நிபுணர்கள் சில வழிமுறைகளைச் சொல்கிறார்கள். பிள்ளைகளுக்கு நீங்கள் நினைக்கிற போதெல்லாம் பணம் கொடுக்கிறதுக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து கைச்செலவுக்கு வைத்துக்கொள் என்று சொல்லுங்கள்.

மிகவும் சின்னப் பிள்ளையாக இருந்தால் ஒரு பத்து ரூபா அல்லது 20 ரூபா நிலைமைக்குத் தகுந்த மாதிரி கொடுங்கள். அதை அவர்களே வைத்து செலவு செய்யட்டும். சிலவேளைகளில் அதை தொலைத்து விட்டாலும் கண்டு கொள்ளாமல் இருங்கள். அவசிய செலவு எது? அநாவசிய செலவு எது?பணம் தொலைந்தால் எவ்வளவு கஷ்டம் என்பதை அவர்களே உணரட்டும்.

வேலை செய்து சம்பாதிப்பதன் value ஐ அவர்கள் புரிந்து கொள்கிற மாதிரி செய்ய வேண்டும். பெரிய பையனாக இருந்தால் படிப்பு, நேரம் போக part time வேலை செய்ய ஏதாவது சந்தர்ப்பம் இருந்தால் தாராளமாக செய்யட்டும். சேமிக்கிற பழக்கத்தையும் சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும்.

சின்னப்பிள்ளைகளுக்கு அந்தந்த நேரத்து சந்தோசம்தான் முக்கியமாகத் தெரியும். நாளைய சந்தோசத்தைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

ஒரு எட்டு வயது பையனுக்கு எதிர்காலம் என்பது அடுத்த மாதமே தவிர அடுத்த வருடமல்ல. புத்திசாலித்தனமாக செலவு செய்வது எப்படி என்பதையும் அவர்களுக்குக் காட்டுங்கள். அதிக விலை கொடுத்து ஒரு பொருளை வாங்குவதை விட குறைந்த விலையிலே இரண்டு தரமான பொருளை வாங்கலாம் என்பதை புரிய வையுங்கள்.

குடும்பச் செலவை இளைஞர்களும் உணர்கிற மாதிரி செய்ய வேண்டும். அவன் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவனாக இருந்தால் அவனையே பெற்றோல் செலவை பார்க்கச் சொல்லுங்கள்.

எல்லாவற்றையும் விட உங்கள் பிள்ளைகளுக்கு நீங்களே ஒரு உதாரணமாக இருங்கள். அப்பா, அம்மாவைப் பார்த்துத்தான் பிள்ளைகள் கற்றுக்கொள்வார்கள்.

பிள்ளைகளிடம் பாசமாக இருக்கத்தான் வேண்டும் அதற்காக பணம் கொடுத்துத்தான் காட்ட வேண்டும் என்றில்லை. ஆசையாக ஒரு வார்த்தை பேசினாலே போதும்.

ஒரு அப்பா தன்னுடைய பையனுக்கு பணத்தினுடைய value ஐ புரிய வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதுக்காக ஒரு plan பண்ணி அவனை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். புறப்படுவதற்கு முதல் பையனிடம் பத்து ரூபாவைக் கொடுத்து பத்திரமாக சேட் பொக்கற்றுக்குள் வைத்துக் கொள் என்றார்.

மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று அட்வைஸ் செய்தார். கூட்டம் அதிகமாக இருந்த ஒரு பேருந்திலே இரண்டு பேரும் ஏறினார்கள். பேருந்து புறப்பட்டதும் அந்த அப்பா தனது பையனின் பொக்கற்றிலிருந்த பத்து ரூபா பணத்தை திருடி தன்னுடைய பொக்கற்றில் வைத்துவிட்டார். பேருந்திலிருந்து இறங்கியதும் பையனைப் பார்த்து பத்து ரூபாய் கொடுத்தேன் அதைக் கொடு என்றார். பையன் பொக்கற்றை தடவிப் பார்த்தான் பணம் இல்லை.

பரிதாபமாக முழிக்க ஆரம்பித்தான். இப்ப அந்த அப்பா பையனைப் பார்த்து இதோ பாரப்பா எப்பவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அதை உனக்கு கற்றுக் கொடுக்கிறதுக்குத் தான் இப்படி உன்னை அழைத்துக் கொண்டு வந்தேன்.

பரவாயில்லை! இனிமேலாவது ஜாக்கிரதையாக இருக்க கற்றுக்கொள். உன்னிடம் இருந்த பணம் எங்கேயும் போகவில்லை. இதோ என்னிடம் தான் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே தன் சேட் பொக்கற்றிலே கையை விட்டார். பொக்கற்றையே காணவில்லை. அதை அப்படியே எவனோ வெட்டி எடுத்துக் கொண்டு போய் விட்டான் . இப்ப அந்த அப்பா பையனை பார்த்து முழிக்க ஆரம்பித்தார்.

சூரியன் பாரபட்சம் இல்லாமல், எப்படி எல்லோருக்கும் தன் உஷ்ணத்தையும் ஒளியையும் வழங்குகிறதோ, அதுபோல அனைவரையும் சமமாக நடத்துபவனே அகிம்சாவாதி. – *வினோபா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# சண்டமாருதம் தள்ளிவிழுத்திய வாழைச் செய்கையாளர்கள்

வட பகுதியில் கடந்த 20, 21ஆம் திகதிகளில் வீசிய கடும் காற்றினால், ஏகப்பட்ட சேதங்கள் நடந்தாகியுள்ளன.

வீசி எறியப்பட்ட வீட்டுக் கூரைகள், முறிந்து விழுந்த மரங்கள், கொட்டி விழுந்த மாங் கனிகள் காய்கள், சரிந்து முறிந்த முருங்கைகள் என்றவாறு சேதங்கள் பலவாகின.

அதிலும் வாழைச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட சேதம் சொல்லிமாளா.

ஆம், கடந்த இரண்டு நாட்களாய் வீசிய கடும் காற்றினால், ஒட்டுமொத்த வாழைகளும் முறிந்து வீழ்ந்து கிடக்கின்ற காட்சியைப் பார்க்கும்போது கண்ணீர் விட்டு அழாமல் இருக்க முடியாது.

அந்தளவுக்கு வாழைச் செய்கையாளர்களின் நிலைமை பரிதாபத்துக்குரியதாகியுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக வாழைக்குலைகளைச் சந்தைப்படுத்த முடியாமல் போக; ஒரு கிலோ வாழைப்பழம் 40 ரூபாய் என்ற எல்லைக்குள் நின்றுவிட்டது.

இஃது வாழைச்செய்கையாளர்களுக்கு நட்டத்தையே கொடுத்திருக்கும்.

பரவாயில்லை ஊரோடும் நாட்டோடும் ஒத்த பிரச்சினை என்பதால் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி பற்றி வாழைச் செய்கையாளர்கள் அதிகம் விசனம் அடையவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், கடந்த 20, 21ஆம் திகதிகளில் வட பகுதியில் வீசிய கடும் காற்றினால் குலை போட்ட வாழைகள் அத்தனையும் முறிந்து போயின.

48 மணி நேரத்துக்குள் நடந்து முடிந்த இயற்கையின் சீற்றத்தால் வாழைச் செய்கையாளர்களின் அத்தனை எதிர்பார்ப்புகளும் தகர்ந்து போயிற்று.

என்ன செய்வது நாங்கள் தமிழர்கள். எனவே எங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் ஏதும் கிடைக்க மாட்டாது. இது காலாகாலமாக இந்த நாட்டில் பின்பற்றப்படும் நடைமுறை.

அண்மையில் வெசாக் பண்டிகை கொண்டாட முடியாமல் போனதன் காரணமாக, வெசாக் கூடுகள் மற்றும் அலங்கார வளைவுகளை நிர்மாணிப்பவர்கள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளதாகவும் இவர்கள் அடைந்த பாதிப்பை ஈடுசெய்வதற்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரச தரப்பால் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், வடபகுதியில் வீசிய கடும் காற்றினால் ஒட்டுமொத்த வாழைகளும் முறிந்து நிலத்திடை கிடக்கின்ற போதிலும் இந்த இழப்புப் பற்றி அரச தரப்பு அறியுமா என்பது சந்தேகம் தான்.

எது எவ்வாறாயினும் வடபகுதி வாழைச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தி அவர்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க வட பகுதி அரச நிர்வாகம் முயற்சிக்க வேண்டும்.

# மாற்றுக்கட்சியை சேர்ந்தவர்கள் இ.தொ.காவில் இணைய முடிவு

(கண்டி)

மலையகத்திலுள்ள மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த பலர், அடுத்துவரும் நாட்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இணையவுள்ளனர் என்று, காங்கிரஸின் நிதிச்செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான மருத பாண்டி ரமேஷ் வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

தற்போது மட்டுமன்றி அடுத்தடுத்து அமையும் அரசாங்கம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தலைமையிலேயே இடம்பெறும் என்றும் அதில் மலையகத்தில் இ.தொ. காவின் ஆட்சியே தொடரும் என்றும் தெரிவித்தார்.

"இந்நிலையில் எதிர்க் கட்சியில் இருந்துகொண்டு எவ்விதமான அபிவிருத்திகளையும் மக்களுக்கு பெருமளவில் செய்ய முடியாது.

எனவே மாற்றுக்கட்சி அங்கத்தவர்கள் பலர் இ.தொ.காவில் இணைவதற்கு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்" எனத் தெரிவித்தார்.

மாற்றுக்கட்சியைச் சேர்ந்த சாதாரண அங்கத்தவர்கள் தொடக்கம் உயர் மட்ட அங்கத்தவர்கள் வரை, இ.தொ.காவில் இணையவுள்ளனர் என்றும் எனவே அவர்களையும் இணைத்துக்கொண்டு இ.தொ.காவின் வேலைத்திட்டங்கள் தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ-4)

# நுளம்பு பெருகுமிடம் காணப்பட்டால் சட்ட நடவழிக்கை எடுக்கப்படும்

## மருத்துவர் எஸ்.மோகன்குமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வீடுகளில் நுளம்பு பெருக்கத்திற்கு ஏற்ற இடங்கள் பரிசோதனையின் போது இனங் காணப்படுமேயானால் வீட்டு உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள ளப்படும் என யாழ்ப் பாணபிராந்திய தொற்று நோயியல் மருத்துவர் எஸ். மோகன் குமார் தெரிவித்தார. யாழில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் டெங்கு நோய் தொடர்பாகவும் விழிப்பாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் கொரோனா மற்றும் டெங்கு நோய்கள் தொடர்பாக அக்கறையுடன் சிந்தித்து செயற்பட்டால் மட்டுமே இந்த இரண்டு தொற்று நோய்களிலிருந்து வெற்றிகரமாக எங்களை காப்பாற்றிக் கொள்ள முடியும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு ஏற்ற இடங்கள் அடையாளப்படுத்தப்படுமே யானால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித் தார். தற்பொழுது கொரோனா நோய தொற்று அபாயம் தொடர்பில் நாம் அனைவரும் செயற்பட்டு வரும் நிலையில் கொரோனா தொற்றி லிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக சுகாதாரத் துறையினர் மற்றும் ஏனைய துறையினர் தொடர்ச்சியாக முயற்சித்து வரும் நிலையில் தற்போது நாட்டில் பெய்து வரும் மழை காரணமாக டெங்கு பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் எமது பிரதேசத்தில் கூடுதலாக காணப்படுகின்றது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# சப்ரிகம வேலைத்திட்டத்தில் முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் சப்ரிகம வேலைத்திட்டத்தின் ஊடாக முதறகட்டமாக 14வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகவுள்ளதாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார். அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அபிவிருத்தி தொய்வடைந்துள்ளது. காலாண்டுக்குரிய வருமானம் இதுவரை பெறப்படவில்லை. இருப்பினும் கடந்த வரவு-செலவுத்திட்ட வேலைகளை இனங்கண்டு உடனடியாக அபிவிருத்திப் பணிகளை செய்து முடிப்போம்.

அததுடன்சப்ரிகமவேலைதிட்டத்தில் எமது பிரதேசத்தில் 14 வேலைத்திட்டங்களுக்கான கேள்வி கோரப்பட்டுள்ளது. மேலும் எமது பிரதேசத்தில் சப்ரி கமக் திட்டம் ஊடாக 58அபிவிருத்தி வேலைத்திட்ட்ங்கள் இடம பெறவுள்ளன.

30ஆண்டு கால யுத்த சூழ்நிலையில் வாழ்ந்த எமக்கு தற்போதைய கொவிட் -19 சூழல் ஒன்றும் புதிதல்ல. இந்த சூழ்நிலையில் தான் வாழ வேண்டுமானால் வாழ ந்து தான் ஆக வேண்டும். மக்களுக்கு கிடைக்க வேண்டிய அபிவிருத்திகள் எவையும் எமது அசமந்தத்தால் கிடைக்காமல் விட்டு விடக் கூடாது என மேலும் அவர் தெரிவித்தார். (ஐ-30)

# சுகாதார அமைச்சின் அறிக்கை அடுத்த வாரத்திற்குள்

(கொழும்பு)

தற்போதைய சுகாதார நிலைமையின் கீழ், எதிர்வரும் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான வழிகாட்டல் அறிக்கையை அடுத்த வாரத்திற்குள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், வாக்களித்தல், வாக்குகளை எண்ணுதல், பிரசாரங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளின் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து வழிகாட்டல் அறிக்கை தயாரிககப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் வெளிப்பிரிவு மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் டாக்டர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவினூடாக இந்த அறிவுறுத்தல்களுக்கமைய தேர்தல் நடத்தப்படுமென சுகாதார அமைச்சின் வெளிப்பிரிவு மற்றும் தொழில்சார் சுகாதார பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் டாக்டர லக்ஷ்மன் கம்லத் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தர்மம் ஒன்றுதான் இறந்த பிறகும் வாழ்கிறது; மற்றவைகள் அனைத்தும் உடலுடன் நாசமடைகின்றன. - ஆஸ்கர் வைல்ட்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக் கிழமை காலை 8 மணியிலிருந்துமாலை 5மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** ஊர்காவற்றுறை பிரதேசம், கரம்பன் பிரதேசம், நாரந்தனை பிரதேசம், மெலிஞ்சி முனை பிரதேசம், புளியங் கூடல் பிரதேசம், சுருவில் பிரதேசம், ஊர்காவற்றுறை நீதிமன்ற கட்டடத் தொகுதி, ஊர்காவற்றுறை வைத்திய சாலை, நாரந்தனை நீப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப் படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

# வெற்றிக்கு வழி



புதுமை என்பதற்காக மட்டுமல்ல ஒரு இலட்சியத்தை ஏற்றுக்கொள்வது. பின்னர் அதைவிடப் புதுமையான ஒன்றைக் கண்டதும் பழையதை விட்டு விடுவது, இது உங்கள் ஆற்றல்களைச் சிதறடித்து விடும்.

ஒன்றை எடுங்கள், அதைப் பின்பற்றுங்கள், முடிவு காணும் வரை அதை விடாதீர்கள். அந்த இலட்சியத்திலேயே வெறியாக இருப்பவன் மட்டுமே ஒளியைக் காண்கிறான்.


இங்கொன்றும் அங்கொனறுமாக நுனிப்புல் மேய்ந்து திரிபவர்கள் ஒருபோதும் எதையும் அடைய மாட்டாாகள். கணநேரம் புலன்களுக்கு ஏதோ சுகம் கிடைக்கலாம். ஆனால் அத்துடன் எல்லாம் முடிந்துவிடும். அவர்கள் எப்போதும் இயற்கைக்கு அடிமைகளே. அவர்களால் ஒருபோதும் புலன்களைக் கடந்து செல்ல முடியாது.

உண்மையிலேயே யோகியாவதற்கு விரும்புபவர்கள், நுனிப்புல் மேய்வதை அடியோடு நிறுத்திவிட வேண்டும். ஒரு இலட்சியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதையே உங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுங்கள். அதையே நினையுங்கள். அதையே கனவு காணுங்கள். அந்த இலட்சியத்திற்காக வாழுங்கள்.

மூளை, தசைகள், நரம்புகள் என்று உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதியும் அந்த இலட்சியத்தால் நிறையட்டும். பிற கருத்துக்கள் அனைத்தையும் விட்டுவிடுங்கள். வெற்றிக்கு வழி இதுவே. ஆன்மீகச் செம்மல்கள் உருவாக்கிய வழியும் இதுவே.

# ஒரேநாளில் ஒரு லட்சம் தொற்று 2 ஆவது அலை தாக்கும் சாத்தியம்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



(ஜெனீவா)

உலகமெங்கும் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் 1 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா வைரஸ்தாக்கியுள்ளது. 2ஆவது அலை தாக்கும் எனவும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

சீனாவில் வுஹான் நகரில் கடந்த டிசெம்பர் 1ஆம் திகதி தோன்றிய கொரோனா வைரஸ், உலகமெங்கும் காட்டுத்தீ போல பரவி வருகிறது.

ஊரடங்கு, வீட்டுக்குள் பொது மக்கள் முடக்கம், முகக்கவசம் அணிதல், தனிமனித இடைவெளியை கடைப்பிடித்தல், கைகளை சனிடைசர் திரவம் கொண்டு அடிக்கடி சுத்தப் படுத்துதல் என பல கட்டுப்பாட்டு வழிகளை கையாண்டும் கொரோனா பரவுவது குறையாமல், உலகமே கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.

கொரோனா வைரஸ் உலகமெங்கும் 50 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு பாதித்துள்ளது. 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இது சர்வதேச அளவில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் நேற்று முன்தினம் காலையுடன் முழ்ந்த 24 மணி நேரத்தில் கொரோனா வைரஸ் 1 லட்சத்து 1,400-க்கும் மேற்பட்டோருக்கு தாக்கி இருப்பது பதிவாகி உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை இல்லாத வகையில் ஒரு நாளில் பதிவான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை இது என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

இதன் மூலம் உலகமெங்கும் கொரோனா பாதிப்புக்கு ஆளானோர் எண்ணிக்கை 49 லட்சத்தை கடந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கூறினாலும், உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகம் என்றும், குறைவான பரிசோதனைகள் உலகமெங்கும் நடந்து வருவதாகவும், பல தகவல்கள் வெளியில் வருவதில்லை என்றும் ஜெனிவாவில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

தொடர்ந்து உலகளவில் அதிக பாதிப்பை சந்தித்து வருகிற நாடாக அமெரிக்காதான் முதல் இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் ரஷ்யா, பிரேசில், இங்கிலாந்து ஆகிய நாடுகள் அணி வகுத்து நிற்கின்றன.

இதுபற்றி அந்த அமைப்பின் தலைவரான டெட்ரோஸ் அதனான் கூறும்போது, கொரோனா வைரஸ் தொற்று முடிவுக்கு வருவதற்கு இன்னும் நீண்ட தூரம் சென்றாக வேண்டும் என்று எச்சரித்தார். இது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளை குறி வைத்து தாக்குவது பற்றி அவர் கவலையும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று சீனாவில் கடந்த டிசெம்பர் தோன்றினாலும் கூட, ஏறத்தாழ 100 நாட்களுக்கு பின்னர்தான் உலக சுகாதார நிறுவனம், கொரோனா வைரஸ் தொற்றை உலகளாவிய தொற்றுநோயாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# அம்பன் தாக்கத்தால் 72 பேர் உயிரிழப்பு

(டில்லி)

மேற்குவங்கத்தில் அம்பன் புயல் தாக்கத்தால் 72 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களின் குடும்பங்களுக்கு தலா 2.5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் எனவும் அம் மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

வடமேற்கு வங்காள விரிகுடா கடல் பரப்பில் உருவான அம்பன் சூறாவளி மேற்குவங்கத்தின் கடல் பகுதி மட்டுமன்றி வங்கதேசத்தின் கடல் பகுதி வழியாக கரையை கடந்தது.

காடுகள் அதிகம் கொண்ட இடமான மேற்குவங்கத்தில் அம்பன் புயல் கரையை கடந்த போது கடும் சூறாவளி காற்று வீசியது. மேற்குவங்க கடலோரத்தில் 5 மீற்றர் உயரத்திற்கு கடல் அலைகள் எழும்பின. இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் மேற்குவங்க மாநிலத்தில் 5 இலட்சம் பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

மரங்கள், வீடுகள் இடிந்து வீழ்ந்தும், மின்சாரம் தாக்கியுமே பலர் உயிரிழந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(2-5)

# இஸ்ரேலை யார் எதிர்த்தாலும் எம் ஆதரவு அவர்க்கு உண்டு

## அயதுல்லா அலி கமேனி தெரிவிப்பு

(டெஹ்ரான்)

இஸ்ரேலுடன் போராடும் எந்த வொரு தேசத்தையும் அல்லது குழுவையும் ஈரான் ஆதரிக்கும் என்று ஈரானின் மூத்த தலைவரான அயதுல்லா அலி கமேனி தெரிவித்தார்.

பாலஸ்தீன விவகாரத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு குறித்து அரபு நாடுகள் கடும் அதிருப்தியில் உள்ள நிலையில், அதன் ஒரு வெளிப்பாடாகவே இந்தக் கருத்து பார்க்கப்படுகின்றது.

கமேனி தனது அதிகாரப்பூர்வ ஆங்கில மொழி டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஒரு பதிவில், 'சியோனிச ஆட்சியை எதிர்க்கும் மற்றும் போராடும் எந்த நாட்டையும் அல்லது எந்த வொரு குழுவையும் நாங்கள் ஆதரிப்போம், உதவுவோம், இதைச் சொல்ல நாங்கள் தயங்குவதில்லை' எனப் பதிவிடப்பட்டுள்ளது.

இதேபோல, கமேனி தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள இன்னொரு பதிவில், 'இஸ்ரேல் அரசாங்கத்தை நீக்குவது என்பது யூதர்களை ஒழிப்பதாக அர்த்தமல்ல. யூத மக்களுடன் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

இஸ்ரேலை வெளியேற்றுதல் என்றால் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் யூத மக்கள் தங்களது சொந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்து வெளிநாட்டினரையும், நெதன்யாகு போன்ற குற்றவாளிகளையும் வெளியேற்றுவதே' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்குப் பகுதிகளில் சிரியாவுக்கு ஆதரவாக களமிறங்கியிருக்கும் ஈரான் மற்றும் சிரியா படையினர் மீது இஸ்ரேல் அவ்வப்போது விமானத் தாக்குதலில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## அமெரிக்காவில்


# கொரோனா தாண்டவத்திற்கு மத்தியில் அணை உடைத்து வெள்ளப்பெருக்கு

(லான்சிங்)

அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தில் கனமழை காரணமாக இரண்டு அணைகளில் உடைப்பு ஏற்பட்டதால், 500 ஆண்டுகளில் இல்லாத பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் கோரத்தாண்டவம் ஆடி வரும் நிலையில், மிச்சிகன் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து மக்களின் இயல்பு வாழ்க்கையை மேலும் பாதித்துள்ளது. கன மழையால் ஆறுகளில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

இந்நிலையில் மிட்லேண்ட் கவுண்டியில் உள்ள ஈடன்வில் அணை மற்றும் சான்ஃபோர்ட் அணையில் உடைப்பு ஏற்பட்டது. அணைகளில் இருந்து தண்ணீர் ஆக்ரோஷமாக வெளியேறத் தொடங்கியதை அடுத்து கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அணையை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி உத்தரவிடப்பட்டது. இதனால் மக்கள் தங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியேறினர்.



மிட்லேண்ட் கவுண்டியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. சுமார் 42 ஆயிரம் மக்கள் வசிக்கும் மிட்லேண்டு நகரின் அனைத்து பகுதிகளும் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன. தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். கனமழை மற்றும் பெருவெள்ளத்தால் ஏராளமான வீடுகள், வாகனங்கள் மூழ்கியுள்ளன.

100 ஆண்டுகளில் இல்லாத தொற்றுநோயுடன் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், இப்போது 500 ஆண்டுகளில் இல்லாத பெருவெள்ளத்தை மிச்சிகன் மாநிலம் எதிர்கொண்டிருப்பதாக மிச்சிகன் ஆளுநர் கூறினார்.

மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும், தனி மனித இடைவெளியை பின்பற்ற வேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# அடுத்த மூன்று நாட்களுக்கு அமெரிக்காவில் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுங்கள்

## ட்ரம்ப் உத்தரவு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அடுத்த மூன்று நாட்களுக்கு தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விடும்படி ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. 16 இலட்சத்து 21 ஆயிரத்து 196 பேருக்கு இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 96 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் ஒருபுறம் தீவிரமாக நடை பெற்றாலும், உயிரிழப்புகளை தடுக்க முடியாமல் மருத்துவத் துறை திணறி வருகிறது.

இந்நிலையில், கொரோனாவால் உயிரிழந்த அமெரிக்கர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அடுத்த மூன்று நாட்களுக்கு தேசியக்கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விடும்படி ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

'கொரோனா வைரஸால் உயிரிழந்த அமெரிக்கர்களின் நினைவாக அடுத்த மூன்று நாட்களில் அனைத்து மத்திய அரசு அலுவலக கட்டடங்கள், தேசிய நினைவுச் சின்னங்களில் தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி உத்தரவிட்டுள்ளேன். மேலும் நாட்டிற்கு சேவை செய்து உயிர்நீத்த ராணுவ வீரர்களின் நினைவு நாளையொட்டி அவர்களை கௌரவிக்கும் வகையில் தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கும்' என ட்ரம்ப் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.(ஜ-2-5)

## பாகிஸ்தானில் விமான விபத்து: 98...

டது.

அந்த விமானத்தில் 91 பயணிகள் 8 விமான ஊழியர்கள் உள்பட மொத்தம் 99 பேர் பயணித்தனர்.

விமானம் கராச்சி விமான நிலையத்தில் தரையிறக்க முயற்சித்தபோது முதல் முயற்சி தோல்வியடைந்துள்ளது. இதையடுத்து விமானத்தை வானில் ஒருமுறை வட்டமடித்துவிட்டு ஓடுதளத்தில் விமானத்தை மீண்டும் தரையிறக்க விமானி முயற்சித்துள்ளார்.

உடனடியாக கட்டுப்பாட்டு அறையில் உள்ள அதிகாரி இரண்டு ஓடுதளங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் அதில் எங்கு வேண்டுமானாலும் தரையிறங்கலாம் என தெரிவித்துள்ளார்.

அப்போது அங்குள்ள விமான கட்டுப்பாட்டு அறையில் இருந்த அதிகாரியிடம் அந்த விமானத்தை இயக்கிய கேப்டன் லேண்டிங் கியரில் கோளாறு ஏற்பட்டுள்ளது என தெரிவித்ததாக ஒரு அதிகாரி கூறியுள்ளார்.

விமான கட்டுப்பாட்டு அறையில் பதிவுசெய்யப்பட்ட விமானி மற்றும் தகவல் அதிகாரியுடனான உரையாடலில் தரையிறங்க சிறிது நேரம் இருக்கும்போது விமானி விமானத்தின் எஞ்சின் செயல் இழந்து விட்டது என பேசியுள்ளார்.

விமானம் இரண்டாவது முறை தரையிறங்க முயற்சி செய்தபோது எஞ்சினில் கோளாறு ஏற்பட்டதால் தான் ஓடுதளத்திற்கு அருகே இருந்த மக்கள் அதிகம் வசித்துவரும் மலிர் நகரின் மாடல் காலனி என்ற குடியிருப்பு பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (ம-3)

## இறக்குமதியாகும் சில பொருட்களுக்கு விஷேட வரி

(கொழும்பு)

இறக்குமதியாகும் சில பொருட்களிற்கு விசேட வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி பருப்பு, சீனி, உருளைக் கிழங்கு, வெள்ளைப்பூடு, மிளகாய், ரின்மீன், யோகட், அப்பிள், திராட்சை, தோடம்பழம் உள்ளிட்டவற்றிற்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவே இந்த வரி விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ம-3)

## கொரோனா...

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஆயிரத்து 68ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் மலேசியாவிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளவராவார்.

இதுவரை 620 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

439 பேர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## பெற்றோல்...

துள்ளது.

கடந்த வாரமளவில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் ஒக்டெய்ன் 92 ரக பெற்றோலின் விலையை 5 ரூபாயால் அதிகரித்திருந்த நிலையில், நேற்று மீண்டும் 5 ரூபாயால் குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பல கோடிரூபாய்...

கடத்த இருந்த போதைப்பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கடல் வழியாக இலங்கைக்கு போதைப் பொருட்கள் கடத்த இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு திருவாடனை அருகே வாகன ரோந்தில் பொலிஸார் ஈடுபட்டு வந்த போது சந்தேகத்திற்கு இடமான முறையில் அந்த வழியாக வந்த முச்சக்கரவண்டி ஒன்றை சிறப்பு குற்றப் பிரிவு பொலிஸார் நிறுத்தி சோதனையிட்டுள்ளனர். இதன்போது முச்சக்கரவண்டியில் மறைத்து வைத்திருந்த போதைப்பொருட்களும் முச்சக்கரவண்டியும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட முச்சக்கரவண்டி சாரிதியிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது அவை இலங்கைக்கு இந்தியாவில் இருந்து போதை பொருட்களை கடத்துவதற்கு செயல்பட்ட சர்வதேச கடத்தல் கும்பல் தொடர்பில் முக்கிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து இந்த போதை பொருள் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டு வந்த வடமாநிலங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் சர்வதேச மதிப்பு சுமார் 5 முதல் 7 கோடி ரூபாய் இந்திய பெறுமதியாக இருக்காலாம் என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-3,100)

## இனப்படுகொலையின் அறிகுறியே கோட்டா...

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் (மே 18) அன்று எனது பேச்சின்போது பின்வருமாறு கூறியிருந்தேன்.

ஐ.நா மனித உரிமைகள் சபையினூடான பொறுப்புக்கூறல் முன்னெடுப்புக்கள் இதுவரையில் தோல்வியை அடைந்துள்ள நிலையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் சபையினை இலங்கை அரசு முற்றாக ஏமாற்றி உதாசீனம் செய்துள்ள நிலையில், ஐ.நா பொதுச் சபையில் இருந்து இலங்கையின் உறுப்புரிமையை ரத்து செய்வதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி வைக்கின்றேன்.

இந்த நிலைமை மிக விரைவில் ஏற்படப்போகின்றது என்று நினைத்தாரோ என்னவோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இம்மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற போர் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் பத்திரிகையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக் கொள்ள நான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை.

எனவே இலங்கை குற்றம் புரிந்து கொண்டிருப்பதை உலகம் அறிந்துள்ளது என்று கண்டே வீராப்பாகக் கதைக்கத் தொடங்கியுள்ளார் ஜனாதிபதி என்று புலப்படுகிறது. வரப் போவதைத் தடுக்க அவருக்கு வேறு வழி தெரியவில்லை போலும்.

அவர் ஆற்றிய உரை போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்ற எத்தகைய துன்பத்துக்குள்ளும் இலங்கையை கொண்டு போக அவர் துணிந்துவிட்டார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் சம்பந்தமாக இடப்பட்ட கட்டளை பீல்ட் மார்ஷல் பொன்சேகா இடப்பட்டிருந்தால் இவ்வாறான வீராப்பு வெளிவந்திருக்குமோ தெரியாது.

போர் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றியுள்ள உரை வரலாற்றின் அடிப்படையில் புரையோடிப்போயிருக்கும் இந்த நாட்டின் இன முரண்பாட்டை கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காமல் அலட்சியம் செய்து, வெற்றிக் கோஷம் எழுப்பி, படையினருக்கு எதிராக செயற்பட்டால் சர்வதேச நிறுவனங்களில் இருந்து வெளியேற போவதாகவும் எச்சரிக்கை செய்துள்ளமை எத்தகைய ஒரு துன்பத்துக்குள் இலங்கை எதிர்காலத்தில் சிக்கி தவிக்கப்போகின்றது என்பதையே காட்டுகின்றது.

இன அழிப்பின் பின்னரும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில், எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்பு சார் இனப்படுகொலை ஒன்றும் ஏனைய மனித உரிமை மீறல்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறப் போவதற்கான ஒரு முன் அறிகுறியாகக் கூட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் போர் வெற்றி நாள் அறிவிப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஆகவே, முன்னர் போல அல்லாமல் ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் இந்த அறிவிப்பு குறித்து தீவிரமான கவனம் செலுத்த வேண்டும்.

இதனை அலட்சியம் செய்யாமல் தமிழ் மக்களை பாதுகாக்கும் முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றுள்ளது. (ம-3)

## சுகாதார அதிகா...

டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் தேசிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக சிலர் தவறான கருத்துக்களை முன்வைப்பது கண்டிக்கத்தக்கது.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் நிலவும் நிலையில் பாடசாலை மாணவர்கள் அல்லது மாணவர்களின் பெற்றோர் சங்கடத்திற்குள்ளாகும் வகையில் எந்தவொரு திட்டமும் முன்னெடுக்கப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## இரு இளைஞர்...

யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 7.15 மணியளவில் யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு சந்தன மாதா கோயிலுக்கு முன்பாக இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சசிகரன் (வயது - 27) என்ற இளைஞனே தலை மற்றும் கையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றயவரான முச்சக்கர வண்டிச் சாரதியும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## ஜனாதிபதியின் ஆலோசகர்...

பரிசீலனை நேற்று வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாகவும் இடம்பெற்றது.

இதன்போதே ஜனாதிபதி ஆலோசகர் றொமேஷ் டி சில்வா நேற்றையதினம் உயர் நீதிமன்றத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற சூழ்நிலைக்கு மத்தியில் பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவிற்கு கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியோர் குணமடையும் வீதம் அதிகரித்துள்ளமை மற்றும் மரண வீதம் வெகுவாக குறைவடைந்துள்ளமை ஆகியன இலங்கையில் கொரோனா வைரஸ் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளதை சுட்டிக்காட்டுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும், சுகாதார நடைமுறைகளை எதிர்வரும் காலங்களிலும் பின்பற்றுதல் அவசியம் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா கூறியுள்ளார். (ம-3)

## கிளி.முகமா...

றும் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும். பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் மனித எச்சங்கள் காணப்பட்டன.

அவற்றுடன் துப்பாக்கிகளும் காணப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் சீருடைகளும் காணப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நிறுவன ஊழியர்களால் பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மனித எச்சங்கள் பெண்களினுடையதாக இருக்கலாம் எனவும், அவை விடுதலைப்புலிகளினுடையதாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது. அடையாளம் காணப்பட்ட பகுதி விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண் அமைந்திருந்த பகுதி எனவும் குறிப்பிடப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவந்த பளைப் பொலிஸார் குறித்த விடயத்தினை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றிற்கு அறிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் நேற்று பிற்பகல் குறித்த பகுதிக்கு வருகை தந்த நீதவான் அவற்றை பார்வையிட்டதுடன் எதிர்வரும் 26ஆம்திகதி அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-3,100)

## ஞாயிறு, திங்கள் நாடு முழு...

களிலும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

மே 24, ஞாயிறு மற்றும் 25 திங்கள் ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இன்று 23, சனி இரவு 8.00 மணி முதல் அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் மே 26, செவ்வாய் அதிகாலை 5.00 மணிக்கு தளர்த்தப்படும். இம்மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் தினமும் இரவு 8.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதும் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையில் இருக்கும் அதேநேரம் மே.26 செவ்வாய் முதல் முன்னர் போன்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட ஊரடங்குச் சட்டத்துடன் தொடர்புடைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

ராசி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| வெற்றி வாரம் | 2811 |
| வர்ணம் | கரு நீலம் |
| திகதி | 22.05.2020 |

வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக ......27.03.2020...... என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

வெற்றி இலக்கங்கள்

13 20 22 29 இடபம்

டபள் சான்ஸ் விசேட இல.

ரூ.500 பரிசுக்குரிய 8562

ரூ.100 பரிசுக்குரிய 318

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே. : 0112 333 546/47

Web: www.dlb.lk

வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த

# 500க்கு மேற்பட்ட கடற்படையினர் பம்பைமடுவுக்கு நேற்று அழைத்து வரப்பட்டனர்

(வவுனியா)

வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்களை தனிமைப்படுத்துவதற்காக வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்து வரப்பட்டனர்.

நேற்று இரவு 7 மணியளவில் 17 பேருந்துகளில் கடற்படையினர் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட கடற்படை வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து, அம் முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் பலர் கொரோனா பரிசோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக 17 பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட கடற்படையினர் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, கடற்படையினரை அழைத்து வந்த பேருந்துகளை வவுனியா, குருமன்காடு பகுதியில் வைத்து இரு ஊடகவியலாளர்கள் புகைப்படம் எடுத்த போது அங்கு வந்த கடற்படை அதிகாரிகள் ஊடகவியலாளர்களை புகைப்படங்களை அழிக்குமாறு கூறி தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 17 பேருந்துகளும் வீதியில் நிறுத்தப்பட்டமையால் சிறிது நேரம் அவ்வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு மேலும் இரு ஊடகவியலாளர்கள் சென்று கடற்படையினருடன் கலந்துரையாடியதையடுத்தும், சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகை தந்து போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த முனைந்ததையடுத்தும் கடற்படையினர் அங்கிருந்து சென்றிருந்தனர்.

(ம-3,250,299)

# உடுப்பிட்டியில் இளைஞன் சடலமாக மீட்பு

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயில் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடந்துள்ளது.

இதேபகுதியைச் சேர்ந்த சாம்பசிவம் ஜீவசங்கரி (வயது-26) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படிசம்பவம் தொடர்பாகவல்வெட்டித் துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-3,18)

Personal Group Class
இரசாயனவியல் (A/L) 2020, 2021, 2022, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.
சி. அங்கதன் B.Sc (Chem.Spl)
தொடர்பு - 075 436 4510
(2879)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240

தேவை
பிலாக்கொட்டை, கருணைக்கிழங்கு, மோதகவள்ளிக் கிழங்கு போன்றன மொத்தமாகத் தேவை.
(C-9611)
தொடர்பு: 076 937 5167

விதை வெங்காயம் விற்பனைக்கு
வடமராட்சி உற்பத்தி, அறுவடை செய்து 86 தினங்கள் நிறைவடைந்த நல்லின விதை வெங்காயம் 10 தொடக்கம் 15 அந்தர் வரை விற்பனைக்குண்டு. (2872)
தொடர்பு:- 077 119 7241

கார் விற்பனைக்கு
HB xxxx இலக்கமுடைய Honda City Japan கார் உடனடி விற்பனைக்கு உண்டு.
(2722)
தொடர்பு:- 077 907 3761

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1988ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம், கிரக பாவம் 16 உடைய சிங்கப்பூரில் வேலை பார்க்கும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை.
அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.
(2870)
தொடர்புக்கு 076 202 9162

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536


# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை குணபாலசிங்கம்

மயிலிட்டி முலவையைப் பிறப்பிடமாகவும் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குணபாலசிங்கம் நேற்று (22.05.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - புஸ்பம் தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினசிங்கம் - ரஞ்சிதமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஜனியின் அன்புக் கணவரும் யசிகா, குணாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வதனா, பூமணி, காலஞ்சென்ற நித்தியானந்தம் மற்றும் ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பூபாலச்சந்திரன் மற்றும் திலகராசா, ரஜீவ்கரன், ஜெயகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் வனசா, ரேணுகாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2020) சனிக்கிழமை நண்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.

(C-9612)

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.